
தமிழரசு
1-2-1978
50 காசு.




புது டில்லியில் நடைபெற்ற இந்தியக் குடியரசு நாள் விழா அணிவகுப்பில்
(26-1-1978) கலந்து கொண்ட தமிழ் நாடு அரசின் அலங்கார ஊர்தி





**மலர் : 8 இதழ் : 15**

**1—2—1978**


## உள்ளே


| | | |
|---|---|---|
| புதிய சகாப்தத்தில் | ... | 3 |
| வளமான வாழ்வு மலர | ... | 6 |
| அண்ணா எனும் இலக்கிய வாதி | ... | 9 |
| நேதாஜி வாழ்விலே . . . | ... | 11 |
| நேதாஜி தீவுகள் | ... | 13 |
| உயிர் ஊசல் | ... | 14 |
| மனைவளம் ஓங்கிட மகத்தான பணிகள் | ... | 17 |
| வலிப்பு நோய் | ... | 20 |
| படமும் செய்தியும் | ... | 22 |
| தீண்டாமை ஒழிய .... | ... | 28 |
| இன்னுயிர் காக்கும் இந்திய மருந்துகள் | ... | 31 |
| ஏழை எளியவர்களுக்கு இலவசச் சட்ட உதவி | ... | 33 |
| திரைப்படத் திருவிழா நிறைவு விழா | ... | 37 |
| விருது வழங்கும் விழா | ... | 41 |


# இந்த இதழில்...

வணக்கம்.

வங்கம் தந்த சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் திருஉருவப் படத்தை இவ்விதழின் மேலட்டை தாங்கி வெளிவருகிறது. 23—1—1978 நேதாஜி அவர்களின் 82-வது பிறந்த நாளாகும். 'அந்தமான் நிக்கோபார்' தீவுகளை 'நேதாஜி தீவுகள்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும்' என்று சென்னையில் நடைபெற்ற நேதாஜி பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு செய்தி – சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டார்.

அவ்விழாவில் அமைச்சர் ஆற்றிய உரையின் சுருக்கத்தையும் 'நேதாஜியின் வாழ்விலே' என்ற செய்தித் தொகுப்பினையும் இவ்விதழில் காணலாம்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் சுதந்தர தின விழாப் பேருரை புதிய சகாப்தத்தில் நாம் அடி எடுத்து வைக்கும் பெருமையினை நினைப்பூட்டுகிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் குடியரசுதின விழாவினையொட்டி வானொலியில் ஆற்றிய உரையும், "வளரும் தமிழகம்" என்னும் தலைப்பில் மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறையமைச்சர் அவர்கள் ஆற்றிய வானொலி உரையும் இவ்விதழுக்குச் சிறப்புச் செய்கின்றன.

பேரறிஞர் அண்ணா நினைவுநாள் பிப்ரவரி மூன்று. கவிஞர் புலமைப் பித்தன், எம். எல். சி., அவர்கள் "உயிர் ஊசல்" என்ற தம் கவிதையில் பேரறிஞர் அண்ணா பற்றிய நினைவு அலைகளைத் தூண்டி, நம் நெஞ்சங்களையெல்லாம் நெகிழ வைத்து விடுகிறார். 'அண்ணா எனும் இலக்கியவாதி' என்ற தலைப்பில் சிந்தனையைத் தூண்டும் கட்டுரை ஒன்றினைத் 'தமிழரசு'க்கு அளித்துள்ளார், முதல்வரின் பத்திரிகைத் தொடர்பு அலுவலர் திரு. பி. சி. கணேசன் அவர்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றதின் கலைமாமணி விருது வழங்கும் விழாத் தொகுப்புக் கட்டுரை— தமிழ் நெஞ்சங்களுக்கு நல்லதொரு விருந்தாகும்.

'ஏழை எளிய மக்களுக்கு இலவசச் சட்ட உதவி' என்ற கட்டுரை நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி ஏறி இறங்கும் சாமான்ய மக்கள் பயன்துய்க்க, அதற்கென்று அமையப் பெற்றுள்ள கழகம் ஆற்றுகின்ற பணிகளை விவரிக்கிறது.

சனவரி 24 முதல் 30 வரை தீண்டாமை ஒழிப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டது, 'தீண்டாமை ஒழிய' என்ற கட்டுரையில் சமூக நலத்துறைச் செயலாளர் தீண்டாமையின் கேடுகள் குறித்தும்—அத்தீமையைக் களைய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும் விளக்கியுள்ளார்.

திரைப்படத் திருவிழா—நிறைவு விழா பற்றிய கட்டுரையும்—அதுபற்றிய வண்ணப்படங்களும் இவ்விதழுக்குச் சிறப்புச் செய்கின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் பணிகள் குறித்தும்—சென்னை வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி குறித்தும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

எழுத்தாளர் பெருமக்களுக்கு மகிழ்ச்சியூட்ட இவ்விதழில் ஓர் அறிவிப்பு உள்ளது. சிறுகதைகளைத் 'தமிழரசில்' வெளியிட முடிவு செய்துள்ளோம். சிறுகதைகளை 'தமிழரசு' இதழுக்கு அனுப்பி வைக்குமாறு எழுத்தாளர் பெருமக்களைப் பெரிதும் கேட்டுக் கொள்கிறோம்.



பிப்ரவரி 3 பேரறிஞர் அண்ணா நினைவு நாள்

# புதிய சகாப்தத்தில்...!

## குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி



"29-வது குடியரசு தினத்தை நாம் கொண்டாட விருக்கிறோம். இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், நமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள நமது குடிமக்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டு இப்போதுதான் கடந்து சென்றது. நமது நாட்டின் சாதாரணக் குடிமகன் ஜனநாயக மதிப்புகளுக்குத் தான் கொண்டுள்ள நம்பிக்கையை மறுபடியும் உறுதி செய்து, உலகத்திலேயே மிகப் பெரிய நாடு என்ற நமது பெருமையை நிலைநாட்டியுள்ளார்.

இந்தப் பழமையான பூமியின் தலைவர்கள் அமைத்துக் கொடுத்துள்ள உணர்வு பூர்வமான உதாரணங்களை நாம் பின்பற்றி இருக்கிறோமா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். புதிய தேசிய உணர்வுகளை நாம் புரிந்து கொண்டு, போதுமான அளவுக்கு அதற்கேற்ப நாம் நடந்து கொண்டிருக்கிறோமா? இந்தச் சந்தர்ப்பத்தில், தொழில் துறை மற்றும் வர்த்தகத் துறையைச் சேர்ந்தவர்கள், தேசியக் கடமையில் தங்கள் பங்கினை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதற்குப் போதுமான சாட்சியங்களை அவர்கள் காண்பிக்கவில்லை என்பது ஏமாற்றமாக இருக்கிறது.

எதிர்காலம் பரந்து கிடக்கிறது. எதிர்காலத்திற்கான நம்முடைய அபிலாஷைகள் யாவை? எல்லா அரசியல் கட்சிகளும் ஜனநாயகத்துக்குத் தங்களைத் தாங்கள் அர்ப்பணித்துக் கொள்வதையும், பொது வாழ்வில் கறைபடாமல் இருப்பதையும் நிரூபிக்க வரவிருக்கும் மாநில சட்ட மன்றத் தேர்தல்கள் ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றன. தேர்தல் முடிவு முக்கியமானதல்ல. அந்த முடிவினை எப்படிப் பெற்றோம் என்பதே முக்கியம். தேர்தல் பிரச்சாரம் பெருமையுடன் நடத்தப்பட வேண்டும். தெளிவான திட்டங்களையும், கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டே தேர்தல் பிரச்சாரத்தை நடத்த வேண்டும்.

மறுபடியும் நம்முடைய வாக்காளர்கள் தங்களுடைய எஜமானர்களை அல்ல—சேவகர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற விருக்கிறார்கள். கடந்த காலத்தில் செய்ததைப் போன்றே, ஜனநாயக முறையையும், ஜனநாயக வாழ்வையும் பின்பற்ற உறுதி எடுத்துக் கொண்ட, முதிர்ச்சி பெற்ற மக்கள் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். எந்த விதத் தடையுமின்றி வாக்களிக்க நம்முடைய மக்களுக்கு நாம் வழி செய்து கொடுக்க வேண்டும். தகுதி பெற்ற ஒவ்வொரு வாக்காளரின் அடிப்படைப் பிறப்புரிமையாகிய இதற்கு என்னுடைய அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும். மக்களின் தடையற்ற எண்ணம் அப்படியே இருக்கட்

டும். முடிவு எதுவாக இருப்பினும், அனைத்தும் நன்றாகவே இருக்கும். இது என்னுடைய உறுதியான நம்பிக்கை.

எத்தனையோ பிரச்சினைகள் நம்மை எதிர் நோக்கியுள்ளன. அவற்றை தீரத்துடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர் கொள்ளவேண்டும். நமது சமுதாயத்திலுள்ள சில விரும்பத்தகாத பிரிவினர் நமது ஜனநாயக வாழ்க்கையையும், நமது உயர்ந்த கொள்கைகளையும், நமது மதச் சார்பற்ற சமுதாய அமைப்பையும் அழித்து விடப் பார்க்கின்றனர். நமது நாட்டில் ஒவ்வொருவருக்கும் பேச்சுரிமை உண்டு. அவரவர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடத் தக்க இடங்களும், வசதிகளும் உண்டு. அவற்றைவிட்டு, நடுத் தெருவுக்கு வந்து, மக்களை அக்கிரம வழிகளுக்குத் தூண்டி, சட்டம், ஒழுங்கைக் குலைத்து, வன்முறைக்குத் தூண்டும் வகையில் பேசுவது முறையல்ல. ஒரு சில அதிருப்தியாளர்கள், நீதிக்கும், நேர்மைக்கும் அடங்கி நடக்கும் மக்களைத் துன்புறுத்தி விட முடியும் என்று நினைக்க வேண்டாம். அப்படிப் பட்டவர்கள், அதாவது தேச நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நடப்பவர்கள் மீது உடனடியாகவும், கடுமையாகவும் நடவடிக்கை எடுக்கப்படும். நமது அரசியல் சாசனத்தை அளித்த பெரியோர்களான மகாத்மா காந்தி, தீர்க்க தரிசனம் வாய்ந்த பண்டிட்ஜி, அஞ்சா நெஞ்சம் படைத்த சர்தார் ஆகியோர் நமக்கு அரசியல் சுதந்தரம் வாங்கித் தந்ததோடு அன்றி நமது பொருளாதார வளர்ச்சிக்கும் நல்லதோர் அடித்தளத்தை அமைத்தார்கள். ஒரு சில பொறுப்பற்ற மக்களின் மனச்சாட்சியற்ற செயல்களின் காரணமாக இவற்றையெல்லாம் இழந்து விட நாம் அனுமதிப்போமா? சுதந்தரத்துக்கு இன்னும் ஆபத்து வரலாம். அதனை நமது சக்தியெல்லாம் திரட்டி எடுத்து, எதிர்த்து, சுதந்தரத்தைக் காப்போமாக!

அவசரக் காலத்துக்குப் பின் தோன்றிய சூழ்நிலை நமது அடிப்படை உரிமைகளையும், சமத்துவ சமுதாயத்தையும், சமூக நீதியையும் வழங்க வசதியளித்துள்ளது. என்னுடைய 10 மாத கால அரசாங்கம் கலந்து கொள்ளும் முதல் குடியரசு தினம் இதுதான். இந்த அரசாங்கத்தைப் பற்றி அவசரமான எந்த முடிவுக்கும் நாம் வரக் கூடாது. இந்த அரசாங்கம் இது வரை சாதித்துள்ள பணிகளை நாம் பார்ப்போம். இந்த அரசாங்கம் நமது மக்களுக்குப் பண்பட்ட ஜனநாயகத்தை வழங்கியிருக்கிறது. பொருளாதாரத் துறையில் எனது அரசாங்கம் காந்தியக் கொள்கையின் அடிப்படையில் வேலை வாய்ப்பை நல்கி, நகர்ப்புற மக்களுக்கும், கிராமப் புற மக்களுக்கும் இடையிலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற முயன்று வருகிறது.

சுதந்தரம் அடைந்த பின் இப்பொழுது தான் முதல் முறையாக நமது நாட்டின் அரசியல் ஒரு கட்சியின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுபட்டிருக்கிறது. மனச்சாட்சியுள்ள மக்கள், பல்வேறு அரசியல் கருத்துக்கள் கொண்ட மக்கள் நாட்டு நலனுக்காகச் சேர்ந்து உழைக்கிறார்கள். இது ஒன்றே போதும். மகத்தான சாதனை. அந்தரங்க சுத்தியோடு வெளியிடப் படும் கருத்துவேற்றுமைகளைப் பெரிதுபடுத்தி, கூட்டுப் பொறுப்புடன் செயல்பட்டு வரும் நமது அரசாங்கத்தின் கூட்டுத் தன்மையைக் குலைத்து விடாமல் இருப்போமாக! நமது சரித்திரத்திலேயே முதல் தடவையாக இந்தி



யர்களாகிய நாம் ஒரு தாயின் மக்களாக இருக்கிறோம். இந்தியா ஒரே நாடு. இந்திய மக்கள் அனைவரும் ஒருவரே. நமது பலத்தை யாரும் குறைத்து மதிப்பிட அனுமதிக்காமல் இருப்போமாக! நம்மை யாரும் அலட்சியப் படுத்தி விடாமல் இருப்போமாக!

நமது விவசாயத் துறை முன்னேற்றம், நமது திட்டமிட்ட பணிகள், சமுதாயத்தில் பலவீனமுற்றலட்சோபலட்ச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு உறுதியான அரசியல் நோக்கும், நிர்வாகத் திறமையும் வேண்டும். நாம் விஞ்ஞானத் துறையிலும், பொறியியல் துறையிலும் கணிசமான அளவு முன்னேறி இருக்கிறோம் என்பதை உலகம் முழுவதும் ஒப்புக் கொண்டிருக்கிறது. நம் மக்களின் எதிர்கால நல்வாழ்விற்காக விஞ்ஞான ஆராய்ச்சியையும், முன்னேற்றப் பணிகளையும் இணைத்து நாம் செயல்பட்டு வருகிறோம். உலகில் தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்த பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று உலகம் இன்று அங்கீகரித்திருக்கிறது.

இந்தியா ஐ.நா சபையில் பொறியியல், நிர்வாகம் ஆகிய துறைகளுக்குக் கணிசமான அளவு நிபுணர்களை வழங்கி இருக்கிறது. இந்த எண்ணிக்கைக்கு இணையாகவே நமது நேச நாடுகளான ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பொறியியல் நிபுணர்களையும் நிர்வாக நிபுணர்களையும் வழங்கி உதவிவருகிறது. இவ்விஷயத்தில் நாம் நியாயமான தற்பெருமையடைவதில் தவறில்லை. ஆனால் அதையே மேற்கொண்டு நாம் வளருவதற்கான சிந்தனையைச் செய்வதிலும், காரியங்கள் செய்வதிலும் நாம் அசிரத்தையாக இருந்து விடக் கூடாது. அதே நேரத்தில் நாம் தனி நபர்களாக முன்னேறுவதோடன்றி தேசம் முன்னேறி இருக்கிறது என்று பிறர் வியக்கும் வண்ணம் கடுமையாக, தன்னலமற்று உழைக்க வேண்டும்.

சமீபத்தில் அரசாங்க நிர்வாக யந்திரம் பல இன்னல்களுக்கு உள்ளாயிற்று. அதிர்ஷ்டவசமாக அந்தச் சூழ்நிலை மாறி, நல்ல லட்சியத்தோடு இயங்கக் கூடிய அரசியல் தலைமை ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகத் துறையில் சேரும் இளைஞர்கள் நல்ல இலட்சியங்களைக்

கொண்டவர்கள். நாட்டுப் பற்று மிக்கவர்கள், கடின உழைப்புக்கு அஞ்சாதவர்கள். இந்தப் பண்புகளை நமது எதிர்காலத்தில் பயனளிக்கும் வகையில் நிர்மாணிக்க விரும்பும் கனவுலக இந்தியாவை நினைவாக்கப் பயன்படுத்துவோமாக! நாட்டு நலனில் அக்கறை கொண்டு, அச்சமோ, தாட்சண்யமோ இன்றிச் செயல்படும் நிர்வாக அதிகாரிகள் இனி எதற்கும் அஞ்ச வேண்டியதிருக்காது.

நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பரம ஏழைகளாக இருக்கின்றனர். இவர்களில் ஒரு சிலர் அரசுத் துறையிலோ, தனியார் துறையிலோ சங்க நிர்வாகத்திலோ குறைந்த ஊதியம் பெற்றாலும், பெரும்பான்மையான மக்களுடன் ஒப்பிடுகையில் வசதியுள்ள குடிமகனே ஆவார். இத்தொழிலாளிகள் கூட்டம் சேர்த்து, சங்கம் அமைத்து, கூப்பாடு போட்டு இன்னும் சில அதிக வசதிகள் பெறுவது, பெரும்பான்மையான மக்கள் அவ்விதம் சங்கம் அமைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கையில், இந்தத் தொழிலாளிகள் மட்டும் சலுகைகள் பெறுவது தர்மமாகுமா?

பொருட்கள் பற்றாக் குறையினாலும் விலையேற்றத்தினாலும் ஏற்படும் கஷ்டத்தை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால், வியாபாரிகள் தங்கள் லாப ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சிப் பொருட்களை உபயோகிக்கும் வழக்கத்தையும் ஒழிக்க வேண்டும். சமூக, பொருளாதாரக் குற்றங்கள் செய்வோர் (அதாவது கள்ளக் கடத்தல், பதுக்கல் போன்ற குற்றங்களைச் செய்வோர்) கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். புது நிர்வாகப் பண்பாட்டை உருவாக்க வேண்டும். மக்களின் பிரச்சினைகளையும் அபிலாஷைகளையும் உணர்ந்து செயல்படக் கூடிய ஒழுக்கமும், நேர்மையும் கொண்ட நிர்வாக யந்திரத்தை உருவாக்க வேண்டும். அப்போதுதான் வளர்ச்சித் திட்டங்களின் பயன்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களுக்கும் போய்ச் சேரும்.

இன்றைய தினத்தைப் போன்ற நாட்களில்தான், நம்மில் பல்வேறு புற வேறுபாடுகள் இருந்தாலும் கூட, ஒற்றுமையாக ஒரு நாடாக செயல்படுகிறோம் என்பது மனத்தில் பதிகிறது. அசோக சக்கரவர்த்தி காலத்திலும்கூட இந்தியா இவ்வளவு ஒன்றுபட்டு இருக்கவில்லை. நமது அதிர்ஷ்டவசமாக பிரிட்டிஷார் நம்மை ஓர் இனமாக, ஓர் நாடாக உருவாக்கினார்கள். ஐரோப்பாவில் பல நாடுகள் இருக்கின்றன. அந் நாடுகளை யாராவது இணைத்து ஒரு நாடாக்க முயன்றால் வெற்றி பெறுவார்களா? நமது நாடு ஒரு துணைக் கண்டம். அர்த்தமற்ற உணர்ச்சிகளுக்கு வயப்பட்டு நம் நாடு பிரிந்து போக அனுமதிக்கக் கூடாது. நமது பழம் பெரும் தேசத்தின் ஒற்றுமைகளையும், சக்தியையும் காப்பாற்றுவது நமது கடமையாக சரித்திரம் நம் மீது விதித்திருக்கிறது. இந்தப் பரஸ்பர நல்லெண்ணமும், அன்பும் நிரந்தரமாகப் பெற்று வாழ்வோம் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. ஆகவே எந்த ஒரு சக்தியும் நமது ஒற்றுமையையும், பாரம்பரியத்தையும் நமது பண்பாட்டுச் செல்வத்தையும் குலைக்க அனுமதிக்க மாட்டோம் என்று சபதமெடுத்துக் கொள்வோமாக!

நாம் சமஷ்டி ஆட்சி முறைக்கு—கூட்டாட்சிக்கு உறுதி பூண்டுள்ளோம். சமீபத்தில் ஆளுநர்கள் மகாநாடு நடைபெற்றது. பல மாநிலங்களில் பல்வேறு அரசியல் கட்சிகள் பதவியிலிருக்கின்றன என்றாலும் மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையே நிலவும் சுமுகமான சூழ்நிலையைக் கண்டு மகிழ்ந்தேன். மாநிலங்களிலுள்ள சில தலைவர்கள், நீண்ட காலம் நாட்டுக்குச் சீரிய பணி புரிந்து புகழ் பெற்றவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளின் அடிப்படையில் எவ்வளவு மாறுபட்டிருந்தாலும், மக்களின் பொதுநலனுக்காகச் சேர்ந்து உழைக்க முடியும். பல பிரச்சினைகளுக்குப் பரிகாரங்கள் காண முடியும் என்பதை உணர்ந்தார்களானால், ஜனநாயக அமைப்பின் கீழேயே நமது சமுதாய, பொருளாதார வளர்ச்சி வெகு எளிதில் சாதிக்க முடியும். எல்லாக் கட்சிகளும் ஏழ்மையை ஒழிக்கவும், சமுதாய அநீதிகளை ஒழிக்கவும், ஒருவரையொருவர் சுரண்டுவதை ஒழிக்கவும் தீர்மானித்துள்ளன. அரிசன மக்கள், சிறுபான்மையோர், பொருளாதார ரீதியில் பின் தங்கியோர் — ஆகியவர் நாட்டின் வளர்ச்சிப் பணிகளில், தேசிய வாழ்க்கையில் மேலும் மேலும் பங்கு கொள்ள ஊக்கமளிக்க வேண்டும்.

நமது முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமல் படுத்தத் தொடங்கிய காலத்தையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டால் விவசாயம், தொழில், ஏற்றுமதி, வர்த்தகம் ஆகிய துறைகளில் முறையே 200 சதவிகிதம், 400 சதவிகிதம், 800 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இவ்வளர்ச்சி யாவும், அபரிமிதமான மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக மக்களுக்குப் பயனளிக்காமல் போய்விட்டது. இந்த ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக மிக அவசரமானதாகும். இந்தத் தேசிய உற்பாதம் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது எல்லா அரசியல் கட்சிகளின் கூட்டுப் பணியாகும்.

இந்த நன்னாளில் காந்தி சகாப்தத்தின் உயிருள்ள பிரதிநிதியாக வாழும் ஒரு சிலரில் முக்கியமானவரான திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களுக்கு தேசத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளாமல் என்னால் இருக்க முடியவில்லை. அவர் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்ந்து, நமக்கு எதிர்காலத்திலும் வழிகாட்ட ஆண்டவன் அருள வேண்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்தித்துக் கொள்வோமாக!

இன்று நமது ராணுவ வீரர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவர்கள் நமது எல்லைகளையும் பாதுகாத்து நாட்டு ஐக்கியத்தை உறுதிப்படுத்துகிறார்கள். பல இன்னல்களுக்கிடையே அவர்கள் தைரியமாகவும், வீரத்தோடும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் நமது பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

நண்பர்களே, நமது எதிர்காலம் சுபிட்சமாக இருக்கும் என்பதில் எனக்குத் தளரா நம்பிக்கை இருக்கிறது. இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நன்னாளில் இந்த நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய காரியங்களைச் சாதிப்போம் என்று நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டு நம்பிக்கை, சுதந்தரம், சாதனை என்ற புதிய சகாப்தத்தில் அடியெடுத்து வைப்போம்.''

''ஜெய் ஹிந்த்''.



# வளமான வாழ்வு மலர...

## வளரும் தமிழகம்

செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்**

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர் என்ற சிறப்பு மிக்க வரலாற்றுக்குரிய தமிழ்மக்கள், உலக நிலப்பரப்பில் மிகவும் தொன்மையான ஒரு பகுதி என்ற பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட தமிழகம், உலகத்தில் பல்வேறு புராதன நாகரிகங்கள் அடிச்சுவடு தெரியாமல் மறைந்து போய்விட்ட நிலையிலும், சீர் இள மைத் திறன் குன்றாப் பாங்குடன் இன்றைக்கும் சிறப்புடன் வாழ்ந்து, வளர்ந்து கொண்டு வரு கிற தமிழ் நாகரிகம்; இத்தனை சிறப்புகளுக்கும் காரணமாக விளங்குகின்ற தமிழ்மொழி; இப்படி நீண்ட, நெடிய வரலாற்றுப் பெருமை மிக்க தமிழ் நிலம்-தமிழ் மொழி-தமிழ் மக்கள்-இவைகளைப் பாராட்டுகின்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்....

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரிந்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும்
தமிழணங்கே உன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!

என்று இதயம் நெகிழ்ந்து வாழ்த்துகின்றார்.

என்றும் இளமையோடு வாழும் தமிழகம் வளரும் தமிழகமாக, ஆற்றிக்கொண்டிருக்கிற அரிய பணிகளைப்பற்றி, இந்நன்னாளில் உங்க ளுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிற வாய்ப்பை அளித்த அனைத்திந்திய வானொலி நிலையத்தாருக்கு எனது பாராட்டுக்கள்.

'வளரும் தமிழகம்' என்பது, வரலாற்றுப் பின்னணியை வைத்துப் பார்த்தால்கூட மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பு என்பதில் சந்தேகம் இல்லை. முடியுடை மூவேந்தர் தமிழ் மண்ணை ஆண்ட காலத்திலிருந்து, இன்று இந்தியத் திருநாட்டின் திலகமாக விளங்கு கின்ற இந்நாள் வரை, இழை அறுந்து போகாத வரலாறு தமிழகத்திற்கு உண்டு. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலைக் கிளர்ச்சி இந்திய மண்ணில் நடந்தபோது, தமிழகம் அதில் சிறப்பானதொரு பங்கேற்று, தன்னு டைய ஆற்றல்மிக்க கடமையை அருமையாக ஆற்றியது நம்முடைய நாளிலே நடைபெற்ற வரலாறு. 1947ல் இந்தியத் திருநாடு சுதந்த ரம் பெற்றதிலிருந்து, தமிழகம் பல்வேறு துறைகளிலும் மகத்தான ஒரு வளர்ச்சியைப் பெற்று வந்திருக்கிறது. இந்தியக் குடியர சில் தமிழ் மாநிலம் சிறப்பான ஆட்சி அமைப் பைக்கொண்ட மாநிலங்களில் ஒன்று என்கிற பெருமையினையும் பெற்றிருக்கிறது.

**முன்னேற்றம் காணும் தமிழகம் :**

கடந்த காலத்தில் தமிழ்நாடு தொழில் துறையில் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றிருக் கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்கினோம். பின்னர் மின்சார உற்பத்தியைப் பெருக்கினால்தான் தொழில் வளர்ச்சி நன்றாக அமைய முடியும் என்று மின்சார உற்பத்தி பெருக்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டது. பல்வேறு கிராமப் பகுதிகளையும் சாலைகளால் ஒருங்கிணைத்தால் தான், கிராம மக்கள் நகரத்தோடு தொடர்பு கொண்டு வாணிபம் வளர்ச்சி அடையும் என் பதால், ஆட்சியாளர்கள் அந்தத் துறையிலும் தனியான கவனம் செலுத்த வேண்டிய கட்டா யம் ஏற்பட்டது. பெரிய தொழில்களும், சிறிய தொழில்களும் பல்வேறு நிலைகளிலும், ஆங்காங்கே ஊக்குவிக்கப்பட்டன. தொழில் துறையிலும், தமிழகம் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டது.

1977ல் நடந்த பொதுத் தேர்தல்களில் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை இடங் களைக் கைப்பற்றியது. பெருமதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலை மையில் அமைச்சரவையும் அமைந்தது. இந்த அமைச்சரவை, ஆறுமாதக் குழந்தை என்கிற நிலையிலேயே நிறையப் பிரச்சினைகளைச் சந்தித்து, அவற்றிற்குத் தீர்வு காண அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு, கணிசமான அளவுக்கு வெற்றியும் பெற்று இருக்கிறது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும்.

வளரும் பயிருக்கு எப்படிக் களைகள் அகற்றப்பட வேண்டுமோ அது போன்று

வளரும் தமிழகத்தில், லஞ்சம் ஊழல் என்ற களைகளைப் போக்கிட வேண்டுமென்பது முதல்வர் புரட்சித் தலைவரின் லட்சியம். தமிழக அரசைப் பொறுத்த வரையில் ஒரு தூய்மையான நிர்வாகம் அமைய வேண்டும் என்பது அதனுடைய அடிப்படைக் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்கள் மக்களிடமிருந்து வரிகள் வாயிலாகவும், வேறு துறைகள் மூலமாகவும் கிடைக்கிற வருமானத்தை அப்படியே மக்களுக்குப் பயன்படும் வகையில் செலவழிப்பது மிக மிக அவசியமான ஒன்றாகும். ஒரு ஏழை நாட்டில், வரிப் பளுவை மக்களால் மிகுதியாகத் தாங்க முடியாது. அதனால் அத்தகைய நாட்டில் ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்றவர்களின் கடமையும் மிகவும் பொறுப்புள்ளதாகிறது. இந்த விஷயத்தில் இந்த அரசு மிகுந்த கண்டிப்போடு செயல்பட்டு வருகிறது. அடுத்த படியாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்பது மிக மிக அவசியம். சமீபத்தில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும், தமிழக விவசாயம் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இருப்பினும் கொள்முதல் செய்வதில் சீரான முறைகளைக் கடைப்பிடித்து, நெருக்கடி நேரத்தில் பதுக்கல்காரர்களின் கை ஓங்கி விடாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் அரசு தேவையான உணவு தானியக் கையிருப்பினை வைத்துக் கொண்டு இருக்கிறது. ஒரு புறத்திலே வெள்ளத்தாலும், புயலாலும் பயிர்களுக்குச் சேதம் விளைந்தாலும், மாநிலமெங்கும் நல்ல மழையின் காரணமாக, பொது விளைச்சல் நன்றாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அதே சமயம், அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் ஏறாமல் தடுக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு, மக்களின் வாழ்க்கைக்கு மிகத் தேவையான கடலை எண்ணெய், நுகர்பொருள் வழங்கும் நிறுவனத்தின் கடைகள் மூலமாகவும், கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் கடைகள் மூலமாகவும், நியாய விலைக்கு விற்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். அதே போலவே விறகு, காய்கறிகள், மலிவான விலையில் கிடைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தொழிலாளர்கள் நிம்மதியுடன் வாழ்ந்தால்தான், உற்பத்திப் பெருக்கம் ஏற்படுத்துவது சாத்தியமாகும். இது விஷயத்தில் அரசு, தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டுமானால், சமீபத்தில் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்குத் தனி ஊதியமாக ரூ. 27 வழங்கியுள்ளதைக் குறிப்பிடலாம். போக்குவரத்து ஊழியர்களின் பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று வர, இலவச பஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பணியாற்றும் போது ஒரு ஊழியர் இறந்து போனால், அவருடைய வாரிசு ஒருவருக்குப் போக்குவரத்துக் கழகத்தில் வேலை தரும் ஏற்பாட்டினையும் அரசு செய்துள்ளது.

தொழிலாளர்கள் நலன் என்று சொல்லும்போது முதலீடு செய்தோரின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் தொழில்களை வளர்க்கவும் இந்த அரசு முனைந்து செயலாற்றுகிறது. அரசு பொறுப்புக்கு வந்த போது நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள் எண்ணிக்கை 153. அரசு இது வரையில் 141 தகராறுகளைத் தீர்த்து வைத்து, தொழில் நலத்தைக் காத்ததோடு வேலை இல்லாமல் அவதிப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதாரத்தில் நலிவுற்று மூடப்பட்ட பஞ்சாலைகள் மீண்டும் செயல்பட பாங்குகள் மூலம் கடனுதவி பெற்றுத் தரவும் தமிழக அரசு முன் வந்திருக்கிறது.

**சுற்றுலாத் துறைக்குப் புதிய ஆக்கம்:**

சுற்றுலாத் துறையை, அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் ஒரு சிறந்த அமைப்பாகத் தமிழக அரசு கருதுவதால், அந்தத் துறையில் விசேஷமான கவனம் செலுத்தி வருகிறது. நம்முடைய நாட்டில் நடுத்தர மக்கள், உழைக்கும் தொழிலாளர்கள், பாடுபடும் விவசாயப் பெருமக்கள் ஓய்வுக் காலங்களில், சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று பயனடைய அரசு திட்டமிட்டுள்ளது.

'தென்னகத்தை நோக்கி' என்கிற திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசின் சுற்றுலாத் துறை, ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ், தென் மாநிலங்கள் ஆகியவற்றோடு கூட்டாகச் சேர்ந்து, ஒரு கருத்தரங்கை நடத்தி, பல்வேறு நாட்டின் பயண எழுத்தாளர்களை இதில் பங்கு பெறச் செய்து, சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு அரசு புதிய ஆக்கம் தேடி இருக்கிறது.

சுற்றுலாத் துறையை வளர்க்கும் திட்டமாக, கொடைக்கானல் ஏரியை அழகுபடுத்துதல், ஏர்க்காடு ஏரியை மேம்படுத்துதல்,

## பெரியார் அஞ்சல்தலை வெளியீடு

பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி இவ்வாண்டு பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17-ஆம் நாளில் பெரியார் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிடப்படும். இந்த உறுதிமொழியை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் மத்திய அஞ்சல்—தந்தித்துறை அமைச்சர் திரு பிரிஜ்லால் வர்மா அளித்தார். தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை யொட்டிப் பெரியார் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டும் என்று மத்திய அரசை, தமிழக மக்கள் சார்பில், தமிழக முதல்வர் தொடக்க முதலே வலியுறுத்தி வந்தார். அந்தக் கோரிக்கை இப்பொழுது வெற்றி பெற்றுள்ளது.

இராமேசுவரம், பிச்சாவரம் ஆகிய இடங்களில் படகுத் துறை அமைத்தல், மாமல்லபுரத்தில் நடுத்தர வகுப்பினரும் குறைந்த செலவில் தங்க தங்குமிடம், ஆவுடையார் கோயில், விராலிமலை ஆகிய இடங்களை மேலும் சிறப் பாக்குதல் போன்ற பல்வேறு காரியங்களிலும் தமிழக அரசின் சுற்றுலாத் துறை ஈடுபட்டு, செயல்பட்டு வருகிறது.

வளரும் சமுதாயத்தில் தேவைகளும் வளர்ந்த படியேதான் இருக்கும். வாழ்க்கைத் தரம் உயர, உயர மக்களின் வாழ்க்கை விழைவுகளும் அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது. இன்னும் சொல்லப் போனால், தேவைகள் அதிகரிப்பது கூட, பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிதான். மக்களின் தேவைகள் அதிகரிக்கும்போது, நுகர் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் உற்பத்தித் திறனும் வளர வேண்டியது அவசியமாகி, வேலை வாய்ப்புகளும் பெருகுகின்றன.

பொதுவாக ஒரு நாடு, தொழில் மயமாகும்போது, தொழிற்சாலைகள் அமைவதற்கான வசதிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே இருப்பதால், தொழில்களும் நகர்ப்புறத்தைச் சார்ந்தே உருவாகின்றன. ஆகவே வேலை வாய்ப்புத் தேடுகின்ற மக்கள் கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்குச் சென்று குடியேறுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதனால் கிராமப்புறங்கள் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகின்றன. குறிப்பாக விவசாயம் சரியான முறையில் கவனிக்கப் படாத நிலைமை தோன்றிவிடுகிறது. அதோடு விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களுக்கும் முழு நேர வேலை கிராமப் புறங்களில் கிடைப்பது இல்லை. அதனால் வருமான விஷயத்தில் அவர்கள் ஏழ்மை என்னும் கோட்டிலேயே இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விடுகிறார்கள். இதன் விளைவாக நமது கிராமப் புறங்கள் ஏழ்மையின் களங்களாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்பதில், தமிழக அரசு தேவையான கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. கிராமப் புற மக்கள் கைத்தொழில்களிலும், குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டு வருவாயினைப் பெருக்கிக் கொள்ள, அரசு தாராளமான வகையில் உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. சிறு தொழில்களும், சிறு அளவில் வியாபாரங்களும் செய்யச் சுமார் 13 கோடியே 36 லட்சம் ரூபாய்களைக் கடனுதவியாகத் தமிழக அரசு வழங்கி இருக்கிறது. இந்த உதவி பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 11,834. இந்தக் கடனுதவியால் உருவாக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புக்கள் 28,440. இவ்வாறு பரவலாக, கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி, வேலை இல்லாதோர் வேலை வாய்ப்புப் பெறவும், முழு நேர வேலை கிடைக்காதவர்கள் தங்களுடைய மிகுதி நேரத்தைப் பயன் உள்ள வகையில் செலவழிக்கவும், தமிழக அரசு திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கிறது.

**திட்டம் வெற்றி பெற மக்களின் ஒத்துழைப்பு தேவை :**

திட்டம் எதுவானாலும், அரசு எவ்வளவுதான் முயன்று செயல்பட்டாலும் மக்களின் பரிபூரணமான ஈடுபாடும் ஒத்துழைப்பும் இல்லாமல் எந்தத் திட்டமும் வெற்றி பெறுவது என்பது சாத்தியம் இல்லை. தமிழக மக்கள் அனைவரும் தமிழக அரசின் பணிகளைப் புரிந்து கொண்டு, அதில் ஊக்கத்துடன் பங்கு ஏற்று, புதிய சமுதாயம் காண்பதற்குச் சிறப்பான ஒத்துழைப்பினைக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழக மக்கள் அனைவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கிராம ராஜ்யம் அமைய வேண்டும் என்று அண்ணல் காந்தி அடிகள் கனவு கண்டார்கள். அதையே தான் பேறறிஞர் அண்ணா அவர்களும் வலியுறுத்தினார்கள். இன்று தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அண்ணல் காந்தி அடிகளும், அமரர் பேறறிஞர் அண்ணா அவர்களும் உருவாக்க விரும்பிய புதிய சமுதாயத்தை அமைப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார். நாம் அனைவரும் அந்த நற்பணிக்கு உறுதுணையாக இருந்து வளமான வாழ்வுக்குப் பாதை வகுக்கும் பணியில் ஈடுபடுவோமாக.

**சென்னை வானொலியில் 15—1—'78 அன்று ஒலிபரப்பப்பட்டது.**

## சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன!

**தமிழக அரசின் கொள்கைகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் மையக் கருவாகக் கொண்டு எழுதப்படும் சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன. கதைகள் 'தமிழரசு' இதழில் 4 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.**

**தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, தொழிலாளர் நலன் போன்றவை கதைக் கருவாக அமைவது சிறப்புடையது. வெளியிடப் பெறாத கதைகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை.**

*ஆசிரியர்*
**'தமிழரசு'**

**கதைகளை அனுப்பவேண்டிய முகவரி :**

**'ஆசிரியர்', 'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்,**
**சென்னை-600 002.**

# அண்ணா எனும் இலக்கியவாதி!



## பி.சி.கணேசன்

**அண்ணா, அரசியலில் மட்டுமல்ல; இலக்கியத் துறையிலும் மாபெரும் சாதனை புரிந்த வித்தகர். தமிழக முதல்வரின் பத்திரிகைத் தொடர்பு அலுவலரான திரு. பி. சி. கணேசன் அவர்கள், 'அண்ணா எனும் இலக்கியவாதி'யைத் திறனாய்வு செய்கிறார் இக்கட்டுரையின் வாயிலாக.**

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தியத் துணைக்கண்ட அரசியலில் மாபெரும் சாதனைகள் புரிந்த வித்தகர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க நியாயம் இல்லை. அரசியலில் அவரோடு ஒத்த நோக்கு இல்லாதவர் கூட சமுதாயத்தின் பல்வேறு துறைகளில் அவர் உண்டாக்கிய மறுமலர்ச்சியை அங்கீகரிக்கவே செய்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் பட்டி தொட்டிகளிலெல்லாம் அண்ணா என்கிற சொல் வீட்டு வழக்குச் சொல்லாக மாறிவிட்டது என்கிற நிலைமையினைக் காண முடிகிறது. அரசியல் தான் அவர் தேர்ந்தெடுத்துக்கொண்டமையக் களம் என்றாலும் அந்தக் களத்தில் அவர் நடத்திய போருக்கு ஆற்றல் மிகு கருவிகளாகப் பேச்சையும், எழுத்தையுமே அவர் பயன்படுத்தினார். அதில் குறிப்பிடத் தக்க அளவுக்கு வெற்றியும் கண்டார்.

அண்ணா எனும் இலக்கியவாதியை மதிப்பீடு செய்கின்ற போது அரசியலில் அவர் எப்படி நுழைந்து செல்வாக்குப் பெற்று மக்கள் போற்றும் மாபெரும் தலைவர் ஆனார் என்பதையும் நடுநிலைக் கண்ணோட்டத்தோடு சிந்தித்துப் பார்ப்பது அவசியம் ஆகிறது.

பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் அண்ணா அரசியலில் பிரவேசம் செய்தார். அவருடைய மேடைப் பேச்சுப்பாணி ஆரம்பக் காலத்திலேயே மற்றவர்களுடைய பேச்சு பாணியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புதுமையான தன்மையைக் கொண்டதாக விளங்கியது. இதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. உலக அறிவைப் பெறுவதற்கு ஆங்கில மொழி ஓர் அருமையான சாதனமாக இருந்ததால், அந்த மொழியில் அண்ணா தன்னுடைய ஆற்றலை ஆரம்பக் காலத்திலிருந்து சிறப்பாக வளர்த்துக் கொண்டார். இந்தப் பயிற்சியால் எண்ணங்களை ஆங்கில மொழியில் சிந்தித்திடும் ஓர் உணர்வு அவர் பால் கருக்கொண்டு, நிலை பெறலாயிற்று.

ஆகவே, எண்ணங்களை ஆங்கில வரிவடிவங்களாகச் சிந்தித்து, பின்னர் அவற்றை அவர் தமிழில் வெளியிட்டபோது அவரது தமிழ் வாக்கிய அமைப்புக்கள் இது வரையில் மேடைத் தமிழில் பயிலப் பட்டு வந்த வாக்கிய அமைப்புகளுக்கு மாறுபட்டதொரு வாக்கிய அமைப்பாக இருந்து, கேட்போரைக் கிறுகிறுக்க வைத்தன. அதோடு அண்ணாவின் கருத்து ஆழமும், எண்ணங்களை இதயத்தின் ஆழத்திலிருந்து அவர் வெளிப்படுத்திய பாங்கும், எதையும் அழகு பட வெளிப்படுத்துவதில் அவர் கையாண்ட லாவகமும், எண்ணங்களை நிரல் பட வெளியிடுவதில் இயற்கையிலேயே அவர் பெற்றிருந்த ஆற்றலும், எல்லாவற்றிற்கும் மேலாக சமூக நீதி வேண்டும் என்கிற விஷயத்தில் அவர் காட்டிய உத்வேகமும் அவருடைய பேச்சு ஒவ்வொன்றையும் இலக்கியச் செப்பமுடைய வடிவ அமைதி கொண்ட கட்டுரைகள் போல் அமைத்துக் கொடுத்தன. இந்தப் பேச்சுப் பாணியை எழுதுவதிலும் ஏறத்தாழ அவர் அப்படியே கையாண்டார். எனவே தான் ஆரம்பக் காலத்தில் அவருடைய பேச்சுக்களை அப்படியே கூட்டாமல், குறைக்காமல் நூல் வடிவத்தில் வெளியிட்டபோது, திட்டமிட்டு எழுதப்பட்ட நூலைப் படிப்பது போன்ற உணர்வினை அவை ஏற்படுத்தின.

ஆரம்பக் காலத்தில் 'விடுதலை' போன்ற நாளேடுகளில் அண்ணா எழுதிய தலையங்கங்கள் தனித்தன்மையோடு விளங்கி அனைவ

ரின் கவனத்தையும் ஈர்த்தன. எண்ணங்களைச் சொல்வதில் நளினத்தையும், நடை அழகையும் கொஞ்சமும் விரும்பாத பெரியார் கூட அண்ணாவின் தலையங்கங்களில் தமது மனத்தைப்பறிகொடுத்துப் பாராட்டி இருக்கிறார் என்பது எழுத்துலகில் அண்ணா பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும்.

நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் அண்ணா என்றைக்குமே முதலாவதாகவும், முடிவானதாகவும் தன்னை ஒரு எழுத்தாளராகவே தான் கருதி வந்திருக்கிறார் என்பது தெளிவாகும். முதலமைச்சர் என்கிற சிறப்பினைப் பெற்றுப் பதவிப் பொறுப்பில் இருந்த காலத்திலே கூட, எழுத முடியவில்லையே என்கிற ஏக்கத்தினைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டிருக்கிறார். முதலமைச்சராக இருந்தபோது தன்னை 'சூழ்நிலைக் கைதி' என்று அவர் அழைத்துக்கொண்டார். அவரது இந்தக் கருத்தை ஆழ்ந்து நோக்கினால் ஓர் அடிப்படை உண்மையினை நன்றாக உணர முடியும். பதவிப் பொறுப்பில் இல்லாத போது ஓர் எழுத்தாளராக அவர் அனுபவித்த சுதந்தரத்தினைப் பதவிப் பொறுப்பில் இருந்த போது அனுபவிக்க முடியவில்லையே என்கிற ஏக்கத்தினை 'சூழ்நிலைக் கைதி' என்கிற சொற்றொடரில் இனம் கண்டு கொள்ள முடிகிறது.

தான் ஓர் எழுத்தாளர் என்கிற பெருமிதத்தை அண்ணா கடைசி வரையில் கைவிடவே இல்லை. கொடிய நோய்க்கு ஆட்பட்டு உபாதை பொறுக்க முடியாமல் அல்லல்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலும் தம்பிக்கு மடல் தீட்ட அவர் தவறியதில்லை. எழுதுவதில் அவர் பெற்ற இன்பத்தை வேறெதிலும் அவர் பெற்றாரா என்பது சந்தேகமே. உலகத்தின் மாபெரும் எழுத்தாளர்கள் எல்லாம் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள எத்தகைய உணர்ச்சிப் போராட்டங்கள் நடத்தி இருக்கிறார்களோ அவை அனைத்தையும் அண்ணா அவர்களின் வாழ்விலும் நம்மால் பார்க்க முடிகிறது. சுதந்தரமான எண்ணங்களை, எவரது கட்டுப்பாட்டுக்கும் ஆட்படாமல் வெளியிட வேண்டும் என்கிற முனைப்போடு அண்ணா அவர்கள் சொந்தமாகத் தொடங்கிய வார ஏடு தான் 'திராவிட நாடு' இதழ் ஆகும். அந்த இதழில் அவர் தொடாத துறையே இல்லை. அவர் தொட்டுச் சிறக்காததும் இல்லை. கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், நவீனங்கள், கேலிச் சித்திரங்கள், துணுக்குகள் என்று என்னென்ன இலக்கிய வடிவங்கள் உண்டோ அவையனைத்தையும் அவர் கருவிகளாகப் பயன்படுத்தி வாசகர்கள் மனத்தில் தன் எண்ணங்களைப் பதிய வைத்தார்.

அண்ணா ஒரு சிறந்த பத்திரிகையாளராகத் தமிழகத்தில் உருவாகிக்கொண்டு வந்த போது தமிழகத்தில் அதே துறையில் தனது ஜனரஞ்சகமான எழுத்து மூலம் ஒரு பெரிய வாசக வட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்த பத்திரிகை ஆசிரியராக கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி விளங்கிவந்தார். அண்ணாவைப் போலவே அவரும் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் மிக்க எழுத்தாளராகச் சிறப்புற்று விளங்கினார். முதலில் 'ஆனந்த விகடன்' மூலமாகவும் பின்னர் தனது சொந்தப் பத்திரிகை 'கல்கி'யின் மூலமாகவும் தமிழக மக்களிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் ரா. கிருஷ்ணமூர்த்தி ஆவார். ஆனால், அண்ணா நடத்திய பத்திரிகைக்கு மற்ற பத்திரிகைகளில் காணப்பட்ட படக் கவர்ச்சி கிடையாது. வெறும் எழுத்தின் பலத்தை மட்டுமே நம்பி இதழை நடத்தினார். மற்ற பத்திரிகைகளில் பல்வேறு எழுத்தாளர்கள் விஷய தானம் செய்து கவர்ச்சி ஊட்டிக் கொண்டிருந்த போது அண்ணா என்கிற ஒருவரே பல்வேறு புனை பெயர்களில் வெவ்வேறு இலக்கிய வடிவங்களில் தன்னுடைய எண்ணங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

'பரதன்' என்கிற புனைப்பெயரில் ஒன்றை எழுதுவார். இன்னொரு இலக்கிய வடிவத்திற்கு 'சௌமியன்' என்கிற பெயர் போட்டுச் சொந்தக்காரர் ஆவார். அண்ணா என்கிற பெயரால் முதல் பக்கத்தில் கட்டுரை இருந்தால் உள்ளேயுள்ள இன்னொரு பக்கத்தில் சி.என்.ஏ. என்கிற பெயர் இருக்கும். அவர் வழக்கமாகக் கையாளும் புனை பெயர்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விட்டால், பெயரே இல்லாமல் அவர் எழுதிய வேறு சில கட்டுரைகளும் பிரசுரமாகும். இத்தனைக்கும், ஒவ்வொரு தலைப்பிலும் எழுதப்படும் விஷயங்களின்பாணி மாறும். நடையிலும் வேறுபாடு தெரியும். அணுகு முறையிலும் புதுமை இருக்கும். அழுத்தத்திலும்பேதம் இருக்கும்.

இவ்வாறு, தானே ஒரு எழுத்துப் பல்கலைக் கழகமாக விளங்கி, எண்ணற்ற கருத்துக்களை, சுவை மிக்க இலக்கிய வடிவங்களாகப் படைத்துக் கொடுத்த பெருமை அண்ணா அவர்களுக்கு உண்டு. எழுத்து நடையில் அண்ணா தேர்ந்து எடுத்துக் கொண்ட பாணி கவர்ச்சி நிறைந்த பாணியாக இருந்தது. எதைச் சொல்ல வேண்டும் என்பதில் அவர் தெளிவுடன் இருந்தார். எப்படிச் சொல்ல வேண்டும் என்பதிலும் அவர் கையாண்ட உத்திகள் ( Techniques ) நூதனமானவை. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடலாம். சமூகத்தில் எத்தனையோ விஷயங்களை நாம் பார்த்தாலும் கூட அவை நம்முடைய கவனத்தில் பதிவதில்லை. சாதாரண மக்களின் கவனத்திற்கு வராத பல விஷயங்கள் ஒரு எழுத்தாளனின் பார்வையில் புதிய அர்த்தத்தோடு பதியக் கூடும். மற்றவர்கள் காணத் தவறுவதை, கண்டு, படிப்போர் மனதில் பதியும் படியாக எடுத்துச் சொல்லுகின்ற ஆற்றல் படைத்தவனே எழுத்தாளன் என்கிற பெயருக்குத் தகுதி உடையவன் ஆகிறான். அதை அவன் கலை அழகோடு வெளியிடுகிற போது அந்த எழுத்து இலக்கிய அந்தஸ்தையும் பெற்று விடுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் 'கேமராவுக்குத் தப்பிய காட்சிகள்' என்கிற தலைப்பில் ஓரங்க நாடகங்கள் சிலவற்றை எழுதினார்கள். சாதாரண மனித வாழ்க்கையில் நிகழ்ந்திடும் சம்பவங்களை—அந்தச் சம்பவங்களின் பின்னணியை—அந்தப் பின்னணியில் பிரதிபலிக்கும் மனித உணர்வை—அந்த உணர்வுகளின் முரண்பாடுகளை—அந்த முரண்பாடுகளால் விளையும் மோதல்களை—அந்த மோதல்களால் கிடைக்கும் நியாயத்தை—இந்த ஓரங்க நாடகங்களில் அண்ணா அருமையாகப் படம் பிடித்துக் காட்டினார்.

'கேமராவுக்குத் தப்பிய காட்சிகள்' என்று அண்ணா தேர்ந்து எடுத்துக் கொண்ட தலைப்பே புதுமையானது. எத்தனையோ காட்சிகளை உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக் காட்டும் கேமரா, சில காட்சிகளைத் தவற விட்டு விடுவதும் உண்டு. அந்தக் காட்சிகள் கேமராவில் பதிவாகாமல் போவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். விரசம் என்று சில காட்சிகள் ஒதுக்கப்பட்டு விடலாம். வேதனை என்று சில காட்சிகள் தள்ளப்பட்டு விடலாம். நமக்கு ஏன் வம்பு என்று சில காட்சிகளை விட்டுவிடலாம். பார்த்தும் பார்க்காதது போல ஒதுக்கிவிடும் காட்சிகளும் இருக்கக்கூடும். ஆனால் அறிஞர் பெருந்தகை அண்ணாவின் கேமராவுக்கு எந்தக் காட்சியும் தப்பியது இல்லை. விடுபட்ட காட்சிகளை, ஏன் விடுபட்டன என்கிற காரணம் படிப்போர் மனத்தில் அழுத்தமாகப் பதியும் படியாக அண்ணா தீட்டிய சொல்லோவியங்கள் கேமராவுக்குத் தப்பிய காட்சிகள் என்ற தலைப்பில் இடம் பெற்றன.

—தொடரும்

# நேதாஜியின் வாழ்விலே...

சுபாஷ் சந்திர போஸ் கட்டாக் நகரில் பிரசிடென்சி கல்லூரியில், இண்டர் மீடியட்டில் (இரண்டாவது ஆண்டு) படித்துக் கொண்டிருந்த சமயம்; அவரது கல்லூரிப் பேராசிரியர் ஓட்டன் என்பவர் ஒரு வெள்ளையர் ; அவருக்கு இந்தியர்கள் என்ருலே ஒரு வெறுப்பு இருந்து வந்தது ; இந்தியர்களை இகழ்ச்சியாகவும் எண்ணுகின்ற இயல்பும் அந்தப் பேராசிரியரிடப் இருந்தது.

ஒரு நாள் —மாணவர் ஒருவர் ஏதோ சிறு குற்றம் செய்துவிட்டதற்காக அந்த மாணவரின் கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டார் பேராசிரியர். இயல்பாகவே நாட்டுப் பற்றும், புரட்சி மனப்பான்மையும் கொண்ட சுபாஷ் போஸ், இந்த நிகழ்ச்சியைக் கண்டு வெகுண்டார். வகுப்பு முடிந்ததும் மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டினுர். வகுப்புக்குச் செல்லாமல் அறப்போர் செய்தார். இந்தச் செய்தி கல்லூரி முதல்வருக்குத் தெரிந்தது; பேராசிரியர் செய்தது தவறுதான் என்பதை உணர்ந்த கல்லூரி முதல்வர், மாணவர்களைச் சந்தித்து,''பேராசிரியரை நான் கண்டிக்கிறேன், நீங்கள் அனைவரும் வகுப்புக்குச் செல்லுங்கள்'' என்று கூறவே, அவரது வாக்குறுதியை ஏற்று, சுபாஷ் தமது சக மாணவர்களுடன் வகுப்புக்குச் சென்ருர். போஸின் உரிமைப் போர் உள்ளத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி இது! இந்த வெற்றி அவரை அப்போதே தலைவராக்கி விட்டது; மாணவர்கள் அனைவரும் சுபாஷின் திறமையை மதித்துப் போற்றி—அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டு மாணவர் கழகத்தை அமைத்தனர்.

---

## அட்டை சொல்லும் செய்தி



[ 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை உருவாக்கி இந்திய தேசிய இராணுவம் என்ற அமைப்பைத் தந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் —இந்திய விடுதலைக்குப் போரிட்ட தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர். வங்கம் தந்த அந்தச் சிங்கத்தின் வரலாற்றுக் காவியம் வீரம் செறிந்தது; வேகம் நிறைந்தது; விவேகம் மிகுந்தது. அந்தக் காவிய நிகழ்ச்சிகளில் ஒரு சில இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ]

**கி. பி. 1919ஆம் ஆண்டு!**

ரௌலட் மசோதா இந்தியாவில் நிறைவேறியது; மக்கள் அதை எதிர்த்துப் போராட்டம் செய்தனர். அந்தச் சமயத்திலே தமது மகன் போஸ் இந்தியாவில் இருந்தால், அரசியல் துறையில் இறங்கிவிடுவார் என்று எண்ணி, ஐ.சி.எஸ். படிப்புக்காக—சுபாஷ் சந்திரரை இலண்டனுக்கு அனுப்பி வைத்தார் அவரது தந்தை ஜானகி நாத போஸ்.

சுபாஷ் இலண்டனில் இருந்தாலும் அவரது உள்ளம் இந்தியாவிலேயே இருந்தது; இலண்டனில் வாழும் ஆங்கிலேயர் உரிமை வாழ்வு வாழ்வதையும், இந்திய மக்கள் அடிமைகளாக நடத்தப்படுவதையும் கண்டபோது அவரது உள்ளம் துடித்தது. என்றாலும் கல்வியைவிட்டுவிடவில்லை; ஐ.சி.எஸ். தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

**1921-ஆம் ஆண்டு!**

அப்போது இங்கிலாந்தில் இந்திய அமைச்சராக இருந்தவர் மாண்டேகு.

ஒரு நாள் அவரைக் காண்பதற்கு சுபாஷ் சந்திரர் சென்றார். சுபாஷை வரவேற்று, இருக்கையில் அமரச் சொன்னார் அவர். வந்த காரணத்தையும் வினவினார்.

''நான் ஐ.சி.எஸ். தேர்வில் நாலாவதாகத் தேறியவன் . .'' சுபாஷ் சொல்லி முடிக்கவில்லை.

''அதற்கென்ன! உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?''—ஆங்கில அமைச்சர் கேட்டார்.

''இப்போது அந்தப் பட்டத்தையும் அதனால் கிடைக்கும் பதவியையும் துறந்துவிட விரும்புகிறேன்!''—சுபாஷ் தெளிவாகக் கூறினார்.

அமைச்சர் வியப்பில் ஆழ்ந்தார். ''சுபாஷ் சந்திரருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ?'' என்ற சந்தேகம் கூட அவருக்கு ஏற்பட்டது. சுபாஷிடம் நீண்ட நேரம் உரையாடினார். ராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். நெஞ்சில் உறுதியும் நேர்மைத் திறமும் கொண்ட சுபாஷின் குறிக்கோளை இம்மியளவுகூட அசைக்க முடியவில்லை அந்த அமைச்சரால்; இறுதியில் தமது ராஜினாமாக் கடிதத்தை அந்த அமைச்சர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்துவிட்டார் சுபாஷ்.

* * *

சுபாஷ் சந்திர போஸின் ஆற்றலை அறிந்த தேசபந்து தாஸ்—வங்கத்திலே ஒரு தேசியக் கல்லூரியை உருவாக்கி—போஸை அதன் முதல்வராக்கினார். அப்போது அவருக்கு வயது 25.

''இந்த இளைஞரால் கல்லூரித் தலைவரின் பொறுப்பை ஏற்க முடியுமா?''—சிலர் கேட்டனர்.

''கல்லூரி நடத்தும் பயிற்சி இல்லாத ஒருவரிடமா கல்லூரி முதல்வர் பொறுப்பை ஒப்படைப்பது?''—இப்படிச் சிலர் கேட்டனர்.

அவர்களின் கேள்விகளும் சந்தேக உணர்வும் தேவையற்றவை என்பதை, போஸ், தமது திறமையான பணியின் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார்.

**1935-ஆம் ஆண்டு!**

சுபாஷ் சந்திரரின் உடல் நிலை சீர்கெட்டது ; சிகிச்சைக்காக வியன்னாவுக்குச் சென்றார். அங்கிருந்து ஜினிவா சென்று, நோபெல் பரிசு பெற்ற 'ரோமன் ரோலந்து' என்னும் புகழ் பெற்ற எழுத்தாளரைச் சந்தித்தார். ஜினிவாவிலே தங்கியிருந்த காலத்தில் 'இந்தியப் போராட்டம்' என்னும் நூலை அவர் எழுதினார். அந்நூலைக் கண்டு ஆங்கில அரசாங்கம் அஞ்சி நடுங்கியது. ''அந்த நூல் இந்தியாவிற்குப் புகக் கூடாது'' என்று தடை விதித்து விட்டது.

* * *

இந்தியா விடுதலைபெறுவதற்கு, அண்ணல் காந்தியடிகள் கடைப்பிடித்து வரும் அன்பு நெறி மட்டும்போதாது என்னும் கருத்து சுபாஷ் சந்திரருக்கு உண்டு. தமது தீவிரக் கருத்தை ஒளிவு மறைவு இன்றி அவர், காந்தியடிகளிடமே தெரிவித்தார். என்றாலும் இந்திய விடுதலைப் போருக்குக் காந்தியடிகளின் தலைமைதான் வேண்டும் என்பதிலே அவருக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

இந்தியாவை அந்நியரின் பிடியிலிருந்து மீட்பதற்காக—வெளிநாடுகளுக்குச் சென்று, பிற நாட்டினரின் உதவியை நாடினார்.

''நமது நாட்டின் விடுதலையை நாமே போர் புரிந்து கைப்பற்றியாக வேண்டும்; ஆகவே தான் நாட்டை விட்டு வெளியேறி, பிற நாட்டினரின் உதவியுடன் இந்திய விடுதலைப் போரில் இறங்கியிருக்கிறேன். இதற்கு உங்கள் ஆசி வேண்டும்'' என்று, சிங்கப்பூர் வானொலி உரையின் மூலம், 1944 ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் நாள் அன்று, காந்தியடிகளுக்குச் செய்தி விடுத்தார் சுபாஷ்.

— எஸ். எஸ்.

''நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லாருக்கும் வேண்டும்.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்கு எந்த அளவு தருகின்றோமோ அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால் சமுகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

—பேரறிஞர் அண்ணா





# அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு நேதாஜி தீவுகள் என்று பெயர் சூட்ட வேண்டும்

"அந்தமான்-நிக்கோபார் தீவுகள் 'நேதாஜி தீவுகள்' என்று மாற்றப்பட வேண்டும்' என்று **மாண்புமிகு செய்தி–சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள்** மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 82வது பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மாண்புமிகு அமைச்சர் இவ்வேண்டுகோளை விடுத்தார்கள்.

1978 சனவரி 23-ஆம் நாள் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 82வது பிறந்த நாளாகும். அப் பிறந்த நாள் விழா வினையொட்டி, சென்னையில் 22—1—'78ல் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மேற்கு வங்கக் கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு திரு பி.பி. மண்டல் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.



நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் கிழக்காசிய நாடுகளில் உள்ள இந்திய மக்களை ஒன்று திரட்டி, இந்தியத் திருநாட்டிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற இந்திய தேசிய ராணுவப் படை அமைத்துப் போராடினர். 1943 அக்டோபர் 21ல் உரிமை யரசைத் தற்காலிகமாக அமைத்தார். இந்தியாவுக்கு உரிமையான அந்தமான்-நிக்கோபார் தீவுகளை இந்தியத் தற்காலிக உரிமை அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஜப்பானிய அரசிடம் சுபாஷ் சந்திர போஸ் கேட்டுக் கொண்டார். 1943 டிசம்பர் 30ல் அந்தமான்—நிக்கோபார் தீவுகளுக்குச் சென்ற சுபாஷ் சந்திர போஸ் அவற்றைத் 'தியாகிகள் தீவு' என மாற்றினர். இத் தீவுகளின் ஹை கமிஷனராக லோகநாதன் என்பவரையும் நியமித்தார்.

வரலாற்றுப் புகழ் பெற்ற இந்நிகழ்ச்சியை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்து முகத்தான், மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறையமைச்சர் அவர்கள் 'அந்தமான்—நிக்கோபார்' தீவுகளை 'நேதாஜி தீவுகள் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்று நேதாஜி பிறந்த நாள் விழாவில் வேண்டுகோள் விடுத்தார்கள்.

"அடுத்த ஆண்டு தமிழக அரசே நேதாஜியின் பிறந்த நாளைக் கொண்டாடும்", என்று அமைச்சர் அவர்கள் அறிவித்ததுடன்,'சென்னை நகரில் முக்கியமானதொரு இடத்தில் நேதாஜி சிலை ஒன்றை அரசு நிறுவும்' என்றும் கூறினர்

# உயிர் ஊசல்

புலவர் புலமைப்பித்தன் எம்.எல்.சி



எட்டாண்டுக் காலமாய் என்தேவ னேஉன்னை
எங்கெங்கு தேடு கின்றேன்
எங்கெங்கு மன்றங்கள் அங்கங்கு நீவரும்
எண்ணத்தில் ஓடு கின்றேன்
கட்டாத மாலைகள் கட்டிவந் தேஅன்புக்
காணிக்கை ஆக்க வந்தேன்
காவேரி போல்வரும் தேன்தமிழ்ப் பேச்சினைக்
காதலால் கேட்க வந்தேன்
நட்டோர்கள் அன்பர்கள் நாடெங்கும் உள்ளவர்
நாலரைக் கோடி கண்டேன்
நாலரைக் கோடிக்குள் நாயக னைமட்டும்
நானின்னும் காண வில்லை
கட்டாயம் நாளையும் காணாது போயினால்
கண்களும் தீய்ந்து போகும்
காலமெல் லாம்உன்னைக் காண்பதற் கோடுமென்
கால்களும் ஓய்ந்து போகும் !



நீராடும் கண்ணுக்குள் நீவந்து மெல்லவே
நிற்கிறாய்; ஓடு கின்றாய் !
நெஞ்சத்தில் நான்கொண்ட கொஞ்சமே இன்பத்தில்
நெருப்பள்ளிப் போடு கின்றாய்!
போராடும் உள்ளத்தில் நீவந்து செல்லமாய்ப்
புன்னகை காட்டு கின்றாய்!
புன்னகை உன்மனக் கற்பனை என்றுநீ
போகிறாய்; வாட்டு கின்றாய்!
சீராடும் பிள்ளைபோல் நீஓடிப் போகில்என்
செந்தமிழ் வாடு மன்றோ?
செந்தமிழ் வாடினால் வாடட்டும் என்றுநீ
சிந்தையில் கொள்வ துண்டோ?
ஊரோடு நானின்னும் உயிரோடு வாழ்வதாய்
ஒருபோதும் எண்ண வேண்டாம்!
உனைக்காணும் எண்ணத்தில் உயிர்ஊசல் ஆடிட
உள்ளவன் மறக்க வேண்டாம்!

மாணிக்க வாசகத் தேன்சிந்தும் வாய்இன்று
மௌனமாய்ப் போன தென்ன ?
மாறாத உன் அன்புப் பார்வையின் தீபங்கள்
மங்கியே போன தென்ன ?
ஆணிப்பொன் தேர்போல ஆடிவரும் உன்மேனி
அப்படிச் சாய்ந்த தென்ன?
அன்றாடம் நாடுநா டென்றோடும் உன்கால்கள்
இப்படியும் ஓய்ந்த தென்ன ?
தோணிக்குள் ளேதுளை வீழ்ந்தபின் னாலந்தத்
துறைமுகம் காண்ப தெங்கே?
தூங்காத கண்களும் தூங்கிடப் போனஎன்
துரைமுகம் காண்ப தெங்கே?
காணிக்கை யாய்வந்த செல்வமே உன்னையும்
கல்லறை மூட லாமோ ?
கல்லறை மூடிடக் கண்டபின் னேவஞ்சக்
கள்வன்நான் வாழ லாமோ?





# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
# காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.




கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர்
அதன் தனிச்சிறப்பை
அறிவர்.

பண்டைச் சிறப்பும் நவீன
நளினமும் இணைந்து திகழ்வது
வண்ணத்துப்பூச்சி



# மனைவளம் ஓங்கிட மகத்தான பணிகள்

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுள் மிக இன்றியமையாததாகக் கருதப்படுவதில் வீட்டுப் பிரச்சினையும் ஒன்று.

நெருக்கடி மிகுந்த சென்னை நகரில் குறிப்பாக அதன் மையப் பகுதிகளில் வீட்டு வசதிகள் இல்லாமல் அல்லல்படும் மக்களைப் பார்க்கிறோம்.

எவ்வளவுதான் வாடகை கொடுத்தாலும், குறைந்தபட்ச வசதிகள்கூட இல்லாத வீடுகளையே—அந்த வீடுகளில் மிகுந்த இடர்ப்பாடுகளிடையே வாழும் எண்ணற்ற மக்களையே நாம் பார்க்கிறோம். ஒரே வீட்டில் பத்து, பன்னிரண்டு குடும்பங்கள் வாழ்கிற நிலைமையைப் பார்த்தால் நமக்கே பரிதாபமாக இருக்கும்.

நல்ல காற்றோட்டமோ, வெளிச்சமோ இல்லாத அந்த வீடுகளில் சுகாதாரத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் மிக முக்கியமாகக் கருதப்படுவது உணவு, உடை, உறையுள் என நமக்குத் தெரியும். இம் மூன்றும் சரி விகிதமாக இருந்தால்தானே ஒருவன் குடும்ப வண்டியைத் தடை ஏதும் இல்லாமல் ஓட்ட முடியும்?

## வாட்டம் போக்கிடும் வீட்டு வசதி வாரியம் :

காற்று, மழை, வெயில் — இவற்றின் கோரப் பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், நோயற்ற வாழ்வுக்கு வழிகோலவும், தம் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் மனிதனுக்கு ஒரு வலுவான நல்ல பாதுகாப்பான இடம் தேவைப்படுகிறது. அந்த இடம் நல்ல காற்றோட்டமுள்ளதாகவும், போதிய வெளிச்சமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான் — கனவு காண்கிறான். அந்தக் கனவு நனவாகுமா? எனவும் அவன் ஏங்குகிறான். அந்த ஏக்கத்தைப் போக்குகிற வகையில் அவனுக்கு ஊக்கமளித்து உதவிட முன்வருகிறது ஒரு வாரியம். அதுதான் ''தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்''.

இவ்வாரியத்தின் எதிர்காலத் திட்டங்கள், மற்றும் வீடுகள் கட்டுவதற்கு ஆகும் செலவைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கைகள் முதலானவற்றைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் செயலாளர் **திரு சி. ஏ. சக்கரவர்த்தி அவர்கள்** விளக்கமாகக் கூறுவதைக் கீழே காணலாம்:

''பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதியைப் பெருக்கிட புறநகர்த் திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கும், குடிசை வாழ் மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும், மீனவர்களுக்கும் நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலையில் வீடுகளைக் கட்டித் தருவதே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமாகும்.

''சென்னையில் இதுவரை எட்டு புறநகர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் மறைமலை நகர், மணலி ஆகிய இரு சிறிய நகர்கள் உருவாக்கப்

பட்டு வருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

**எதிர் காலத்தின் ஏற்றமிகு திட்டங்கள் :**

''வாரியத்தின் எதிர்காலத் திட்டங்கள் பல உள்ளன.

சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் 11,600 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, பகுதி வாரியாக வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-ஆம் ஆண்டு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 1,227 குடியிருப்புக்களையும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 1,119 குடியிருப்புகளையும், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 2,353 குடியிருப்புகளையும், அரசு ஊழியர்களுக்கு 557 குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டித் தர வரையறுக்கப்பட்டு, திட்டம் நடந்து கொண்டு வருகிறது.

''இவற்றுள் சில முக்கிய திட்டங்கள் பற்றிய விவரங்களாவன:

''கொரட்டூரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 120 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, 312 வீடுகளும், செனய் நகரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 64 வீடுகளும், வியாசர்பாடியில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 144 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 24 வீடுகளும், நந்தனத்தில் அதிக வருமானம் உள்ளவர்களுக்கு 30 வீடுகளும், இராஜா அண்ணாமலைபுரத்தில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 136 வீடுகளும், அசோக் நகரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 48 வீடுகளும், அதிக வருமானம் உள்ளவர்களுக்கு 72 வீடுகளும், இந்திரா நகரில் அதிக வருமானம் உள்ளவர்களுக்கு 60 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 30 வீடுகளும், கலைஞர் கருணாநிதி நகரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 180 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 576 வீடுகளும், திருவான்மியூரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 222 வீடுகளும், அறிஞர் அண்ணா நகரில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு 528 வீடுகளும், நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு 78 வீடுகளும், அண்ணாநகர் மேற்குப் பிரிவில் குறைந்த வருவாயினருக்கு 420 வீடுகளும், மணலியில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு 543 வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

''மேலும் ஈரோட்டில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 518 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 240 வீடுகளும், அதிக வருமானம் உள்ளவர்களுக்கு 50 வீடுகளும், திருச்செங்கோட்டில் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 263 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 374 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 28 வீடுகளும், மதுரையில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 228 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 30 வீடுகளும், கடலூரில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 158 வீடுகளும், புதுக்கோட்டையில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 300 வீடுகளும் வேலை ஆரம்பிக்கும் நிலையில் இருக்கின்றன. இவை அடுத்த 2 ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும்.

''மேலும், நுங்கம்பாக்கத்தில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 48 வீடுகளும், இந்திரா நகரில் நடுத்தர, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 180 வீடுகளும், மதுரையில் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 228 தொடர் வீடுகளும், நடுத்தர வருமானம், உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு 47 வீடுகளும் கட்டித் தரும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

**செலவைக் குறைக்கச் சீரான நடவடிக்கை :**

''ஒவ்வோர் ஆண்டும் கட்டடப் பொருட்களின் விலை உயர்விற்குத் தகுந்தாற்போல் கட்டடத்தின் விலையும் உயர்ந்து வருகின்றது. இந்த உயர்வைக் கட்டுப்படுத்த என்.பி.ஏ., எஸ்.இ.ஆர்.சி. ஆகிய ஆராய்ச்சி நிறுவனங்களின் நவீன புதிய கட்டுமான முறைகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தான் பெருமளவில் செயலாற்றி வீடுகள் கட்டுவதற்காகும் செலவைக் குறைக்க முயற்சித்து வருகிறது.

''இதன்படி சி.பி.ஆர்.ஐயால் வடிவமைக்கப்பட்ட ஆர்.சி.சி.





சானல் யூனிட்டுகள் சிக்கனத்திற்காகவும் விரைந்து கட்டடப் பணிகளை முடிக்கவும் தளமாக உபயோகப்படுத்தப்படுகின்றது.

**“அல்டிமேட் ஸ்டெரங்க்த் டிசைன் (Ultimate Strength Design :** *கட்டடப் பணியின் மதிப்பீட்டில் 10 முதல் 12 சதம் உருக்கிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. உருக்கின் உபயோகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க இம் முறையில் உறுதி வாய்ந்த உருக்கு முறுக்குக் கம்பிகள் (ஆர். டி. எஸ்.) உபயோகப்படுத்தப்படுகின்றன.*

**“அண்டர் ரீம்டு பைல்ஸ் :** கான்கிரீட் தூண்கள், கரிசல் மண் பகுதியில் உபயோகிக்கப்பட்டுச் சிக்கனமான அடிக்கல் அமைப்பாகச் செயல்படுத்தப்படுகின்றது. கருங்கல் கிடைக்குமிடங்களில் கருங்கல்லுடன் சிமெண்ட் கலவை சேர்த்து நவீன முறையில் ரூர்க்கி பிளாக்குகள் உருவாக்கப்பட்டு, சுவர்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் கட்டடத்தின் விலை, பெருமளவில் குறைகின்றது:

**“எரி சாம்பல் (பிளை ஆஷ்) :** அனல் மின் நிலையங்களிலிருந்து வீணாகும் எரி சாம்பலை சிமெண்ட்டுடன் கலந்து சிமெண்டின் உபயோகத்தை எரிசாம்பல் குறைத்து சென்னை நகர், திருச்சி மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பயன்படுத்துகிறோம்.

**“சுண்ணாம்புக் கலவை :** உள்ளூரில் கிடைக்கும் சுண்ணாம்பு கான்க்ரீட்டிற்காகவும், சுவர்களுக்காகவும், சிமெண்ட் கிடைக்காத நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

**“இரண்டாந்தர அல்லது நடுத்தர மரங்களை உபயோகித்தல் :** கதவுகள் மற்றும் சன்னல்கள் செய்வதற்கு நடுத்தர மரங்கள் நவீன இரசாயன முறையில் பதப்படுத்தி உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் தேக்கு மரத்தின் உபயோகம் குறைக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட மாற்று முறைகளைச் செயலாற்றுவதால் கட்டடச் செலவில் 15 சதவீதச் சிக்கனமும், உறுதியும் நிலை நாட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மனை வளம் ஓங்கிட மகத்தான பல பணிகளைச் செவ்வனே செய்து வருவதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

—பேட்டி: **பி. வி. கிரி**

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சாதனை!

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 100-வது திட்டத்திற்குப் புதுடெல்லியில் உள்ள வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி கார்ப்பரேஷன் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தக் கார்ப்பரேஷனிடமிருந்து 100 திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்ற நாட்டின் முதலாவது ஏஜென்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இதுவரை 38 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கான திட்டங்களுக்கு அங்கீகாரம் வாங்கியுள்ளது. இந்தத் தொகையில் 29 கோடியே 43 இலட்சம் ரூபாயை அந்தக் கார்பபரேஷன் கடனாக வழங்கும்.**

**இவற்றில் பொருளாதாரத் துறையில் நலிந்த பிரிவினருக்காக 5,061 யூனிட்டுகளும், நடுத்தர வருமானப் பிரிவினருக்கு 2,137 யூனிட்டுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.**

**இந்தக் கார்ப்பரேஷனிடமிருந்து அதிகபட்ச அளவுக்குக் கடன் உதவி பெறும் நிறுவனம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தான்.**

**இந்த வாரியத்தின் புதுத் திட்டங்களினால் தமிழ்நாட்டில் சென்னை உள்பட 24 நகரங்களுக்குப் பயன் கிடைக்கும். ****

# வலிப்பு நோய்

டாக்டர் ஏ. கருப்பண்ண பிள்ளை
உதவி மருத்துவர்
இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை,

தொழிலாளர்களிடையே சிலருக்கு Epilepsy என்று சொல்லப்படும் வலிப்பு நோய் காணப்படுகிறது. ''எனக்கு வலிப்பு நோய் இருக்கிறது.'' இனி நான் வேலை செய்ய முடியுமா? இயந்திரங்களில் வேலை செய்யும்போது எனக்கு வலிப்பு நோய் வந்தால் கை, கால் போன்ற உறுப்புக்களில் காயம் ஏற்பட்டுப்பல இடையூறுகளுக்கு, ஆளாக நேரிடுமே, இதைத் தவிர்ப்பது எப்படி? இந்நோயிலிருந்து காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?'' என்ற சந்தேகங்கள் பலரிடையே காணப்படுகின்றன.

வலிப்பு நோய் என்பது தொன்று தொட்டு நம்மிடையே காணப்படும் ஒரு நோய் ஆகும். இந்நோயானது ஜூலியஸ் சீஸர் காலத்திற்கு முன்பிருந்தே காணப்பட்டது என்றும், ஜூலியஸ் சீஸரும் இந்நோயால் அவதிப்பட்டார் என்றும் வரலாறு கூறுகிறது. இந்நோய் அவருக்கு வரும்போது அவர் உடலில் ஏற்படும் வலிப்பைக் கண்டு அரசன் மீது கடவுள் வந்து விட்டார் என்று நம்பி மக்கள் அவர் மீது மிகுந்த பக்தியும் மரியாதையும் செலுத்தி வந்தனர்.

இயேசு பெருமான் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்நோய்பற்றி விவரித்துள்ளனர். கிப்பாக்ரடீஸ் என்பவர் மூளையில் ஏற்படும் மாறுதல்களால்தான் இந்நோய் வருகிறது என்பதை முதன் முதலில் எடுத்துக் கூறினார். அதற்கு முன்பு பேய் பிசாசுகளால் தான் இந்நோய் உண்டாகிறது என்ற மூடநம்பிக்கையுடன் மக்கள் இருந்தனர்.

இந்த வலிப்பு நோயை 'காக்காய் வலிப்பு' என்றும் சிலர் கூறுகின்றனர். கை, கால்களில் ஏற்படும் வலிப்புதான் காக்காய் வலிப்பு என்று திரித்துச் சொல்லப்படுகிறது. இதேபோல்தான் ஒருவர் மற்றொருவரின் கை, கால்களைப்பிடித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதை 'காக்காய் பிடிக்கிறார்' என்று சொல்கிறோம்.

இத்தகைய வலிப்பு நோய்க்கு முன்பு திட்டவட்டமான மருந்து எதுவும் கிடையாது. ஆனால் இப்பொழுது இந்நோயைக் கண்டு பயப்படத் தேவையில்லை. ஏனென்றால் தற்பொழுது பல நவீன மருத்துவ முறைகளினாலும், மருந்துகளாலும் இந்நோயை முழுவதுமாகக் கட்டுப்படுத்தலாம்.

வலிப்பு நோய் என்பது ஒரு தொற்றுநோயும் அல்ல, பரம்பரை நோயும் அல்ல.

வலிப்பு நோய் என்பது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் ஒரு வகை நோயாகும். இது பேயோ, பிசாசோ பிடித்தால் உண்டாகும் நோய் அல்ல. இந்நோய் மூளையில் உண்டாகும் ஒரு வகை எரிச்சலால் தோன்றுகிறது.

மூளையில் எரிச்சல் தோன்றுவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். குறிப்பாக. பிறந்து கொண்டிருக்கும் பொழுதோ பிறந்த பிறகோ நிகழ்ந்த பல சம்பவங்களின் விளைவாக அது இருக்கலாம். மற்றும் மூளையில் ஏற்பட்ட நோயின் விளைவாகவோ ஒரு காயத்தின் விளைவாகவோ இருக்கலாம்.

**வலிப்பு நோயின் வகைகள் :**

ஒருவருக்கு ஏற்படும் வலிப்பு நோய் எத்தகையது என்பது அவருடைய மூளையில் எந்தப் பகுதி எரிச்சலுக்குள்ளாகியுள்ளது, எந்தப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்திருக்கின்றது.

**பெரு வலிப்பு (Grandmal) :**

பெருவலிப்பின்போது மனிதன் தன் நினைவை இழந்து கீழே விழுகின்றான். உடம்பும், கை, கால் போன்ற மற்ற உறுப்புக்களும் சுண்டிச் சுண்டி இழுக்கப்பட்டுத் துடிக்கின்றன. இவ்வகை வலிப்பில் ''தனக்கு வலிப்பு வரப் போகிறது'' என்று நோயாளிக்கு ஒரு தன்னுணர்வு முன்கூட்டியே வரும். வலிப்பு 30 நொடிகளே இருக்கும். பிறகு சில நிமிடங்கள் மூர்ச்சை இருக்கும்.

**சிறுவலிப்பு :**

சிறு வலிப்பின்போது கண நேரம் மட்டும்தான் அவருக்கு புத்தி சுவாதீனம் இருக்காது. தசைகளில் சில துடிக்கலாம்.

**சைக்கோ மோட்டார் :**

இந்த வலிப்பின்போது அவனுடைய நடத்தை வழக்கத்திற்கு மாறானதாக இருக்கும். உதாரணமாக ஒருவித நோக்கமும் இல்லாமல் சுற்றிக்கொண்டிருப்பான். சப்புக் கொட்டுதல் வெறும் வாயில் எதையோ விழுங்குவது போன்ற முகபாவங்கள் இருக்கும். சம்பந்தமே இல்லாது ஏதாவது சொல்வான். சுய உணர்வு ஏற்பட்ட பிறகு நடந்தது எதுவும் அவனுக்கு நினைவு இராது. இதனைத்தான் சைக்கோ மோட்டார் வலிப்பு என்று சொல்கிறோம்.

இம் மூன்று வகை வலிப்புகளில் ஏதாவது ஒன்று வரலாம். அல்லது ஒன்றன்பின் ஒன்றாக மூன்றுமே வரலாம்.

பொதுவாக வலிப்பு நோய் ஆயிரத்தில் ஒருவருக்கு இருக்கிறது. இந்நோய் இருப்பவர்கள் மற்றவர்களைப்போல் சமுதாயத்தில் சுறுசுறுப்புடன் வேலை செய்ய முடியும்.

வலிப்பு நோய் வந்தவர்களுக்கு அவர்களது கையில் இரும்புத் துண்டை வைக்கிறார்கள். இதனால் தசை நடுக்கம் நிற்குமா? என்று பலர் கேட்கலாம். சோதனை முறைப்படி பார்த்தால் இதற்குச் சான்று எதுவும் கிடையாது. இந்த தசை நடுக்கம் தானாகவே தான் நிற்கிறது.

**வலிப்பு நோய் ஏற்பட்ட உடன் செய்ய வேண்டியவை**

வலிப்பு நோயினால் உடல் நடுக்கம் ஏற்படும்போது அவன் வலியினால் துன்புறுவது இல்லை. நடுக்கம் உண்டானதும் அவனை மெதுவாகக் கீழே படுக்க வைக்க வேண்டும். நடுக்கத்தை நிறுத்துவதற்காக அவனைப் பிடித்து



நிறுத்தவோ, உட்காரவோ வைக்கக்கூடிய தசை நார்கள் சுண்டி இழுப்பதைத் தடுக்கக் கூடாது. அவனைப் பக்கவாட்டில் படுக்க வைக்க வேண்டும். ஏனென்றால் உமிழ்நீர் சரளமாக விழ வசதியாக இருக்கும். தவிரவும் நோயாளிக்குத் தொண்டை அடைக்காது. கைக்குட்டையையோ அல்லது ஒரு துண்டுத் துணியையோ பந்து போல் சுற்றிப் பற்களுக்கிடையே வைக்க வேண்டும். நாக்கையோ, உதடுகளையோ அவன் கடித்துக் கொள்ளாமல் இருக்க இது உதவியாக இருக்கும். அருகில் கனமான பொருட்கள் ஏதாவது இருந்தால் அவற்றை அப்புறப்படுத்தி விட வேண்டும். இதனால் நோயாளிக்குக் காயம் எதுவும் ஏற்படாமல் தடுக்கலாம். அவனை எழுப்புவதற்காக முகத்தில் தண்ணீர் எதுவும் அடிக்கக்கூடாது. நடுக்கம் நின்ற பிறகு அவன் தூங்கி விட்டு இயற்கையாக எழுந்திருக்கும்படி விட்டுவிட வேண்டும். இந்தத் தசை நடுக்கம் அரைமணி நேரத்திற்கு மேல் நீடித்தால் மருத்துவரை அழைத்துச் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்நோயிலிருந்து பூரண குணம் பெறுவதற்கு அருகிலுள்ள மருத்துவமனை, ஆரம்பச் சுகாதார நிலையம். E.S.I. மருத்துவ மனை ஆகியவைகளுக்குச் சென்று தகுந்த மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மற்ற நோய்களைப் போலவே தசை நடுக்க நோயையும் ஆராய்ந்து பரிசோதித்து வைத்தியம் செய்ய வேண்டும். மருந்துகளை நாள்தோறும் சாப்பிட வேண்டும். அவை வழக்கமாக ஆகிவிடுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

தசை நடுக்க நோயைக் கட்டுப்படுத்த மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடுவதால் மூளைக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாது.

சளி, காய்ச்சல் போன்ற நோய் இருக்கும்போது இந்த மருந்தை நிறுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் மற்ற மருந்துகளுக்கு அவை இடையூறாக இருப்பதில்லை. வேறு ஏதாவது நோய்கள் ஏற்பட்டால் அதற்காக இம்மருந்துகளை நிறுத்தவோ, குறைக்கவோ கூடாது.

மருத்துவரைக் கேட்காமல் மருந்தை நிறுத்தவோ, மருந்தின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது. இதனால் முன்னைவிடக் கடுமையான வலிப்புநோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

வலிப்பு நோயை ஆராய்வதற்கு மூளை அலையைப் பதிவு செய்துதான் பார்க்க வேண்டியிருக்கும். மூளை அலைப்பதிவிற்கு "எலெக்ட்ரோ என்சிபாலோகிராம் (Electro Encephalogram) என்று பெயர். இதைப் பதிவு செய்யும் அந்தக் கருவிக்கு எலெக்ட்ரோ என்சிபாலோகிராப் ( Electro Encephalograph ) என்று பெயர்.

நோயாளியின் தலை மீது சிறு உலோகத் துண்டுகள் வைக்கப்பட்டிருக்கும். அந்த உலோகத் துண்டுகளில் உள்ள நீண்ட கம்பிகள் எலெக்ட்ரோ என்சிபாலோகிராப் என்னும் மூளை அலைப்பதிவுக் கருவியுடன் இணைக்கப்பட்டிருக்கும். அவை மூளையின் மின்செயலை ஒரு காகிதத்தில் அலைக்கோடுகளால் பதிவு செய்யும். இதனால் நோயாளிக்கு தீங்கு எதுவும் நேராது.

மேற்படி சோதனை செய்து நோயாளிக்கு ஏற்பட்டுள்ள வலிப்பு எத்தகையது என்பதைக் கண்டுபிடித்து அதற்குத் தகுந்த சிகிச்சை முறைகளைக் கையாளலாம்.

வலிப்பு நோய் உள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பலாமா என்று சிலர் நினைக்கலாம். வலிப்பு நோய் என்பது ஒரு தொற்றுநோய் அல்ல. இதனால் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கு நேராது. எனவே அக்குழந்தைகளைப் பள்ளிக்கு தாராளமாக அனுப்பலாம். இந்த நோயைப் பற்றித் தெரிந்து கொண்டால் இந்நோய் உள்ளவர்கள் மீது அனுதாபம் தான் ஏற்படுமேயன்றி எவ்வித அருவருப்பும் தோன்றாது.

இந்நோய் உள்ள தொழிலாளர்கள் வேலை செய்ய முடியுமா? என்று பலர் நினைக்கலாம். இந்நோய் உள்ள தொழிலாளி, மருத்துவரின் ஆலோசனைப்படி ஒழுங்காகச் சிகிச்சை எடுத்துக்கொண்டு அவரும் மற்றவர்களைப் போல் வேலை செய்யலாம். அவர்கள் நெருப்பு சம்பந்தப்பட்ட வேலைகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

இதே போன்று வலிப்பு நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா? குழந்தைப் பேற்றை அடையலாமா? என்ற சந்தேகமும் பலரிடம் உள்ளது. இந்நோய் உள்ளவர்களுக்கு உடல் நடுக்கம் நன்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு, அவர்கள் ஒழுங்கான சிகிச்சை முறைகளையும் மேற்கொண்டு வந்தால் அவர்களும் மற்றவர்களைப் போல் மணம் செய்து கொண்டு, குழந்தைப் பேற்றையும் அடைவதில் தடை எதுவும் கிடையாது. பெற்றோருக்கு உள்ள இந்நோய் குழந்தைகளுக்கும் வரும் என்ற நிச்சயம் இல்லை. எனவே அதற்காகக் கவலைப்படத் தேவை இல்லை.

எனவே வலிப்பு நோய் என்பது குணப்படுத்தக் கூடிய நோய் தான். தற்போது உள்ள நவீன மருத்துவ சிகிச்சைகளினால் அவர்கள் பூரண குணம் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இந்நோய் உள்ளவர்கள் இதற்காக அச்சப்படவோ, கவலைப்படவோ தேவை இல்லை.



# உறுதிமொழி

தியாகிகள் நினைவு நாளில் 30-1-1978 அன்று சென்னை கோட்டை இராணுவ அணிவகுப்புத் திடலில் முதல்வர் தலைமையில் மௌன அஞ்சலியும், தீண்டாமை ஒழிப்புக்கான உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

“இந்திய அரசியல் அமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான் நமது அரசியல் அமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, காயம் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன்.

அரசியல் அமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்கச் சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும் உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும்; மேலும் தீண்டத்தக்காதவர்கள் என்ற கொடுமைக்காளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக் காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமார உறுதி அளிக்கிறேன்.



சர்வோதய நாளில் (30-1-1978) சென்னை கடற் கரையிலுள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்குத் தமிழக ஆளுநர் அவர்கள் மாலை அணிவித்தார்.

# படமும் செய்தியும்



கிண்டி காந்தி மண்டபத்தில் 30-1-1978 அன்று நடைபெற்ற சர்வோதய நாளில் திரு. ஆச்சாரியா கிருபளானியும் தமிழக ஆளுநரும் பங்கேற்றனர்.

தீண்டாமை ஒழிப்பு விழாவை முன்னிட்டு, சென்னை கோடம்பாக்கம் அம்பேத்கார் திடலில் 30-1-1978 அன்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வார நிறைவு விழாவில் தையல் இயந்திரத்தை மாநக ராட்சித் தனி அலுவலர் திரு. சீதாராமதாஸ் வழங்கினார்.





சிங்கப்பூர் பாதுகாப்புத் துணையமைச்சர் திரு. டாக்டர் கோக் கெங் சுவி (**Dr. Goh King Swee**) அவர்களுக்கு 28-1-1978 அன்று தமிழக முதல்வர் அவர்கள் விருந்தளித்தார்கள்.



தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. க. மனோகரன் அவர்கள் 24-1-1978 அன்று கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது பட்டா வழங்கினார்.

அகில இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியில் நிகழ்ந்த உணவுக் காட்சியில் பங்கு பெற்றோருக்கு 29-1-1978 அன்று உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் பரிசுகளை வழங்கினார்





அகில இந்திய சுற்றுலா
வர்த்தகப் பொருட்காட்சியில்
செய்தி மக்கள் தொடர்புத்துறை அரங்கம்.



திரைப்படத்திருவிழா '78 ஐ சென்னையில் மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு எல். கே. அத்வானி தொடங்கிவைத்தார்.



திரைப்படத் திருவிழா '78-ன் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையுரை ஆற்றிய போது......

திரைப்படத் திருவிழாவின் தொடக்க விழாவும் நிறைவு விழாவும் சிறப்புடன் நடைபெற ஏற்பாடு செய்ததற்காகக் கலைவாணர் அரங்கிற்கு வழங்கப் பட்ட கேடயத்தை, குடியரசுத் துணைத்தலைவர் ஜாட்டியிடமிருந்து செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு என். கிருஷ்ண மூர்த்தி, ஐ. ஏ. எஸ்., அவர்கள் பெற்றுக் கொண்டார்.



ரைப்படத் திருவிழா '78-ன் தொடக்க ழாவும் நிறைவு விழாவும் கண்ணையும் ருத்தையும் கவரத்தக்க வகையில் நடை பற்ற கலைவாணர் அரங்கின் வர்ச்சிமிகு தோற்றம்.





# சென்னையில் குடியரசுநாள் விழா

அணிவகுப்பு மரியாதையை ஏற்க வந்த ஆளுநரை முதல்வர் வரவேற்றார்.

ஆளுநருக்கு முப்படைத் தலைவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.





சென்னையில் குடியரசு நாள்விழா அணிவகுப்பு இவ்வாண்டு (26-1-1978 அன்று) எளிமையாகக் கொண்டாடப்பட்டது.







குடியரசுநாள் அணிவகுப்புக் காட்சிகளில் சில.......











# தீண்டாமை ஒழிய...

**பி. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்.,**

**ஆணையர் மற்றும் அரசு செயலாளர்,**

**சமூக நலத்துறை.**

பண்டைக்கால இந்துக்களின் வருணாசிரம தர்மத்திலிருந்து தான் சாதி வேறுபாடுகள் தோன்றின. இந்து சமுதாயத்தைப் பற்பல சாதிகளாகப் பிரிக்கவேண்டுமென்பது அக்காலத்திய உத்தேசமல்ல. அவரவர்கள் பின்பற்றி வந்த தொழில்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் அன்று பலவகையாகப் பிரிக்கப்பட்டனர். ஆனல், பிற்காலத்தில் இது சாதி வேறுபாடாகக் கிளர்ந்தெழுந்தது. பிறப்பால் உயர்ந்தவர் என்ற கொள்கை பிற்காலத்தில் உருவான கொள்கையாகும். ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்றதால் வள்ளுவப் பெருந்தகையும் இவ்வேறுபாட்டுக் கொள்கையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வெறுத்து ஒதுக்கினர் என்பது புலனகும். தங்கள் உழைப்பின் மூலம் சமுதாயத்திற்கு நன்மை விளைவித்து வந்த மக்கள் நாளடைவில் தீண்டத்தகாதவர்களாகி விட்டனர்; தீண்டாமை என்பது சமுதாயக் கேடாக உருவெடுத்தது.

சமூக சீர்திருத்தவாதிகளும், சமயப் பிரச்சாரகர்களும், பிற சிந்தனையாளர்களும் தங்கள் அறிவுரைகள் மூலம் தீண்டாமை என்ற தீய பழக்கத்திலிருந்து மக்களைத் திருத்த முனைந்தனர். ஆயினும், அண்ணல் காந்திஅடிகள் இவ்வகையில் தம் கவனத்தைத் திருப்பும் வரை தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கம் வெற்றியடையவில்லை. மகாத்மா காந்தியடிகள் தீண்டாமையைக் களைந்தெறிய அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்; அரிசன முன்னேற்றத்தைத் தமது செயற்பாடுகளில் முக்கியமான குறிக்கோளாகக் கொண்டார்.

தீண்டாமையை ஒழிப்பதற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17, 35 பிரிவுகளில் விதித்துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன; பின்னர் 1955-ஆம் ஆண்டைய தீண்டாமை (குற்றங்கள்) சட்டம், இயற்றப்பட்டது. சட்டத்தில் தண்டனை அளிக்கும் விதித்துறைகள் போதுமான அளவு கடுமையானதாக இல்லை என்றும் எதிர்பார்த்த பலனை அவை தரவில்லை என்றும் கடந்த கால அனுபவங்கள் நமக்குக் காட்டுகின்றன. 1955-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மூல சட்டத்தின் திருத்தப்பட்ட வடிவில் உள்ள ''குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' தண்டனைகளைக் கடுமையாக விதிக்கும் விதித்துறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

திருத்தப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

தீண்டாமைக் குற்றங்கள் அனைத்தும் பிடியாணை வேண்டாதவை; இணக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட இயலாதவை.

தண்டனை கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. தண்டனையும் அபராதமும் ஒரே சமயத்தில் தற்போது விதிக்கப்படும்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ தீண்டாமையை போதித்தாலோ அல்லது வரலாறு, தத்துவ, சமய அல்லது பாரம்பரிய அடிப்படையில் அதற்கு விளக்கம் கற்பித்தாலோ இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக அது ஆக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான வழிபாட்டு இடங்கள், பொது மக்கள் வழிபடுவதற்குப் பயன்படுத்துவதற்கெனச் சொந்தக்காரர் அனுமதித்தவாறு தனியாருக்குச் சொந்தமான வழிபாட்டு இடங்களை ஒட்டி அமைந்துள்ள நிலங்கள், துணைக் கோயில்கள் ஆகியவை சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஏதாவது ஒரு பகுதியில் தீண்டாமைக் குற்றங்களைச் செய்யுமாறு தூண்டுவதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மொத்தமாக அபராதம் விதிக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தீண்டாமைக் குற்றங்களைச் செய்து தண்டனை பெற்றவர்கள் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களிலும், போட்டியிடுவதினின்றும் தடை, செய்யப்பட்டுள்ளனர்.

## குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்:

* தண்டனை ஈராண்டு வரை சிறைவாசம் மற்றும் ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் ஆகும்.

* தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட அருகதையற்றவர்களாவார்கள்.

* நேரடியாகவோ, மறைமுகமாகவோ தீண்டாமையைப் போதிப்பது குற்றமாகும்.

* தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் பகுதிக்குக் கூட்டு அபராதம் விதிக்கப்படும்.



# காந்தியடிகள் போற்றி வளர்த்த இலட்சியம்

"தமிழ்நாடு முழுவதும் 1978 ஜனவரி 24 முதல் 30 வரை 'தீண்டாமை ஒழிப்பு வாரம்' கொண்டாடப்படுவதை நான் வரவேற்கிறேன்.

சமுதாயத்தில் இருந்து தீண்டாமையை அறவே ஒழித்து அரிசனங்களைக் கைதூக்கி விடுவது என்பது, வாழ்நாள் முழுவதும் காந்தி அடிகள் போற்றி வளர்த்த இலட்சியங்களுள் ஒன்ருகும். அரசியல் சட்டத்தின் மூலம் தீண்டாமை ஒழிக்கப்பட்டு 28 ஆண்டுகள் ஆன பின்பும்கூட, தீண்டாமையைக் கடைப்பிடிப்பது இன்னமும் முழுதும் ஒழிக்கப்படவில்லை. அந்த அளவுக்கு நமது சமுதாயத்தில் இக்கொடிய நோய் ஆழமாகப் பரவியுள்ளது. சமுதாயத்தி லிருந்து இந்தச் சமூகத் தீமை அறவே ஒழிக்கப் படுவதற்கும், தேசத் தந்தை அவர்கள் விட்டுச் சென்ற அரும்பணி ஈடேறுவதற்கும் பாடுபடுவ தற்கும், இச்சந்தர்ப்பத்தில் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவோம். சாதி வேறு பாடுகளைத் தங்களிடையேயும் ஒழித்துவிடும்படி நான் எல்லா அரிசனங்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

(தீண்டாமை ஒழிப்பு வாரத்தை யொட்டித் தமிழக ஆளுநர் விடுத்த செய்தி)

1955-ஆம் ஆண்டு குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இச்சட்டத்தின் விதித்துறைகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்க மாநில அரசுக்கு உதவுவதற்காக அதிகாரிகள், அதிகாரியில்லாதோர் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகின்றதா எனக் கண்காணிக்கக் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைமையில் சிறப்புப் பிரிவு ஒன்றையும் மாநில அரசு அமைத்துள்ளது.

கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, தென்ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 'இயங்கும் காவலர் படை' செயல்படுகிறது. அரிசன வகுப்பினர் மீது மற்ற வகுப்பினர் இழைக்கும் கொடுமைகளையும் வன்முறைகளையும் தடுப்பதில் அது சிறப்பாகக் கவனம் செலுத்துகிறது. சட்டத்தின் விதித்துறைகளை மீறுபவர்களைக் கண்டுபிடிக்கிறது. இயங்கும் காவலர் படையின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான செயற் குறிப்பு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்காக இது இந்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் அரிசனங்களையும், சமுதாயத்தின் பிற நலிந்த பிரிவினரையும் துன்புறுத்துவது பற்றி வரும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்து மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் அனைவரிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் திட்டவட்டமானவையாக இருந்து வெளிப்படையாகத் தெரிகின்ற புகார்கள் அனைத்தும் உரியவாறு விசாரிக்கப்பட்டு, விசாரணையின் முடிவுகளையொட்டி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தீண்டாமையைக் களைந்தெறிய அரசு பல நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், பழைய வழக்கங்களை ஒழித்து, பாரம்பரியமான எண்ணங்களை ஒழிப்பது அவ்வளவு எளிதல்ல. இப்பொழுதும்கூட, பல கிராமங்களில் அரிசனங்கள் துன்புறுத்தப்படுவது பற்றிய புகார்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. உணவருந்தும் பொது இடங்களுக்குள் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அரிசனங்களின் சவ ஊர்வலங்கள், ஜாதி இந்துக்கள் குடியிருக்கும் தெருக்களின் வழியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. நமது எண்ணங்களுக்கும் நடைமுறைகளுக்கும் நீண்ட இடைவெளி இன்னும் நிலவி வருகிறது. சட்டப்படிக்கான நடவடிக்கைகளும் அரசு மேற்கொண்ட முயற்சிகளும் இந்தத் தீய சக்திகளை ஒழிக்க ஓரளவுக்கு உதவினாலும் கூட, மக்களின் மனத்தில் சமூக விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமே இப்பிரச்சினைக்கு உண்மையில் முடிவான தீர்வு காண இயலும்.

அரிசனங்களின் வறிய நிலைமை தான் அவர்களின் வாட்டத்துக்கும், சமூகத்தில் பின்தங்கியமைக்கும் காரணமாகும். எனவே அவர்களது வாழ்க்கைத்தரம் விரைவாக உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் குழந்தைகளுக்கு முறையான கல்வி வசதியையும் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் செய்து தரவேண்டும். இதற்காகத் தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரிசனக் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 30-11-'77 அன்றுள்ளவாறு 2.56 இலட்சம் குடும்பங்கள் மொத்தம் ரூ. 5.25 கோடி மதிப்பிலான வீட்டுமனைகளைப் பெற்றுள்ளனர். சாதிவேறுபாடுகளைக் களையும் பொருட்டு, இந்துக்கள் வாழும் இடத்திற்கு அருகிலேயே அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட வேண்டும் என்று, கண்டிப்பான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரிசன நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் பெரும் பகுதி, அவர்களின் கல்வி வசதிக்காகவே செலவிடப்படுகிறது. 1977-'78 வரவு-செலவுத் திட்டத்தில் அரிசன நலனுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 15.95 கோடியில், கல்வி வாய்ப்புக்காகவே ரூ. 9.8 கோடி செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் எல்லா நிலையிலும் இலவசக் கல்வி அளிக்கப்படும்



# புதிய சமுதாய அமைப்பு மலரட்டும்!

தீண்டாமை ஒழிப்பு வார விழா (அரிசன வாரம்) 1978 ஜனவரி 24 முதல் ஜனவரி 30-ஆம் நாள் வரை தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. அரிசனங்கள் தமிழ்நாட்டு மக்கள் தொகையில் 18 சதவிகிதம் உள்ளனர். மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் பன்னெடுங் காலமாக தீண்டாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டு, சமுதாயத்தில் அவர்களுக்குரிய இடத்தையும் மரியாதையையும் பெற முடியாத நிலையில் இருந்தனர். அவர்களின் நிலையை உயர்த்த, சமூகத்தில் மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றுத் தர, பல்வேறு தலைவர்கள் வெவ்வேறு கால கட்டங்களில் அவரவர் வழியில் பாடுபட்டனர். அண்ணல் காந்தியடிகளும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்தச் சமூகத்திற்குப் புது வாழ்வு அளிக்க முயன்ற தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். அண்ணா வகுத்துக் காட்டிய அற வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அரிசனங்கள் என்று காந்தி அடிகளால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஆதி திராவிடப் பெருங்குடி மக்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் தமிழக அரசு அயராது பணியாற்றி வருகிறது. தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்தை நமது சமுதாயத்திருந்து அறவே நீக்கத் தமிழக அரசும், இந்தியப் பேரரசும் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்புத் தருமாறு தமிழக மக்கள் அனைவரையும் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**—தீண்டாமை ஒழிப்பு வார விழாவை முன்னிட்டு தமிழக முதல்வர் வெளியிட்ட செய்தி.**

என அண்மையில் அரசு முடிவு எடுத்துள்ளது.

அரசியலமைப்பின் 335-வது பிரிவின் 16 (4) பிரிவிற்கிணங்க, அரசிதழ் பதிவு பெற்ற பணிகள், அரசிதழ் பதிவு பெறாத பணிகள் ஆகிய இரண்டிலும் 18 சதவீதக் காலியிடங்களை அரிசனங்கள்/பழங்குடி மக்களுக்கு ஒதுக்கி வைக்க மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாநில அரசு நிறுவனங்கள் அனைத்திற்கும் இந்த ஒதுக்கீடு பொருந்துவதாகும். கல்லூரிகளிலும் தொழில் கல்லூரிகளிலும் சேர்வதற்கு இது பொருந்தும். அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளினால், பின்தங்கிய, நலிந்த இப்பிரிவினரின் அறியாமை கணிசமான அளவுக்கு அகன்றுள்ளது; அவர்களது பொருளாதார நிலையும் ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னால், கல்வி நிறுவனங்களில் அரிசனங்கள்/பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் தற்போதைய நிலைமை மாறியுள்ளது. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அனைத்தும் தற்போது நிரப்பப்பட்டு விடுகின்றன; இதைத்தவிர அவர்கள் தகுதி அடிப்படையில் பொது இடங்கள் சிலவும் பெறுகின்றனர். தற்போது நிர்வாகத்தின் உயர் பதவிகளில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

அரிசனங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்குடன் உழவு மாடுகள், கறவைக் கால்நடைகள் ஆகியவற்றை வாங்குவதற்காக நிதி உதவி செய்யப்படுகிறது. சிறு வியாபாரம் தொடங்க வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்படுகின்றன. அரிசன, பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துறை செயல்படுத்தும் திட்டங்களினாலும் வேளாண்மை, வருவாய், கூட்டுறவு போன்ற பல்வேறு பொதுவான துறைகளின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களினாலும் அரிசனங்கள் பயனடைந்து வருகின்றனர்.

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தங்கப்பதக்கம், நிதி உதவி ஆகியவை அளிப்பதன் மூலம் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். தூய்மையாகக் காக்கப்படும் குடியிருப்புகளுக்குப் பரிசுகள் வழங்குதல் ஆகிய பிற ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. காந்தி அடிகள் பிறந்தநாள் விழா போன்ற நிகழ்ச்சிகளில் பல சாதியினரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தும் ஒத்துரிமைப் பண்பாடு வளரவும் அதிகாரிகள் ஏற்பாடு செய்கின்றனர்.

சமூகக் கொடுமையான தீண்டாமைக்குப் பன்னெடுங்காலமாக ஆட்பட்ட அரிசனங்களை உயர்த்த அரசின் நடவடிக்கைகள் மட்டும் போதா. நீண்ட நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் இக்கொடிய பழக்கத்தை வேரோடு களைய நாம் ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும். ஐந்தாண்டுகளுக்குள் தீண்டாமையை ஒழிக்க மத்திய அரசு வகுத்த கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமானால் பொதுவாக மக்களிடம் மன மாற்றம் உருவாக வேண்டும்.

# இன்னுயிர் காக்கும் இந்திய மருந்துகள்



சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய மருந்துகள் மருத்துவ மனை ஆராய்ச்சி நிலையம் கப நோய் (ஆஸ்த்மா), வாத சம்பந்தமான மூட்டு வீக்கம் (முடக்கு வாதம்) ஆகிய நோய்களைக் குணப்படுத்தக்கூடிய மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கிறது!

இந்த மருத்துவமனையில் இயங்கும் யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஐந்து இந்திய மூலிகை மருந்துகள் கலவையைக்கொண்டு ஆஸ்த்மாவுக்குப் புது மருந்தினை உருவாக்கியிருக்கிறது.

இந்த மருந்தைப் பலருக்குக் கொடுத்துப் பரீட்சை செய்து பார்த்ததில் சுமார் 67லிருந்து 87 சதவிகித நோயாளிகளுக்கு முழுக் குணம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு ''ஓரளவு'' குணம் ஏற்பட்டது.

இந்த நோய்க்கான சிகிச்சைக் காலம் 21 நாட்கள் மட்டுமே ஆகும். மருந்துச் செலவும் மிகக் குறைவு. சுமார் 30 ரூபாய் தான்!

**முடக்கு வாதம் :**

அதே மாதிரி மற்றொரு தீராத நோய் முடக்கு வாதம் (கீல்வாயு). இதைக் குணப்படுத்தப் பல ஆராய்ச்சிகளுக்குப்பிறகு இரண்டு மூலிகை கொண்ட ஒரு மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கும் 21 நாள் சிகிச்சை தான்.

முடக்கு வாத நோய் ஏற்படுபவர்களுக்கு இந்தப் புது மருந்தைக் கொடுத்துப் பரீட்சை செய்ததில் நூற்றுக்கு 77லிருந்து 80 சதவிகித நோயாளிகளுக்கு முழுக் குணம் ஏற்பட்டது. 13லிருந்து 17 பேருக்கு ஓரளவு குணம் தென்பட்டது.

**மஞ்சள் காமாலை :**

அதே மாதிரி மரண பயம் கொடுக்கக் கூடிய மஞ்சள் காமாலை நோய்க்கும் சிறந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளுக்கு இங்குச் சிகிச்சை இலவசம். புற நோயாளியாக வந்தும் மருந்து வாங்கிப் போகலாம். மருந்துகள் இலவசமாகத் தரப்படுகின்றன.

இந்த விவரங்கள் இந்திய மருத்துவத்துறை மருத்துவ இயக்குநர் திரு எஸ். கே. காதிரியும், ஆராய்ச்சித் துறைப் பிரிவு அதிகாரி டாக்டர் எஸ். ஜி. மொகிதினும் தெரிவித்துள்ளார்கள்.

மத்திய அமைப்பான இந்திய மருத்துவ ஆராய்ச்சித் துறையின் யுனானி மருத்துவப் பிரிவு மேற்படி நோய்களுக்குச் சிறந்த மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகளை 1971ல் தொடங்கியது.

இப்போது வெற்றிகரமாக மேற்படி மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கிறது. பொதுமக்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் இந்தக் கண்டுபிடிப்புகள் எளிய செலவில் மிகுந்த பயனுடையதாக இருக்கும். மேற்படி புது மருந்துகளினால் எந்த விதமான வேறு நோய்களும் ஏற்படா என்று மருத்துவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

இந்திய மருந்துகளைக் கொண்ட மருத்துவச் சிகிச்சை நிலையமான மேற்படி மருத்துவமனை 1970ல் 100 படுக்கை வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மேலும் 50 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. நாள்தோறும் 1,500 பேர் புற நோயாளிகளாகச் சிகிச்சைக்கு வருகிறார்கள். சித்த முறை, ஆயுர்வேத முறை, யுனானி முறைச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

**மத்திய அரசு உதவி :**

இந்த மருத்துவ மனையுடன் மருந்துகள் தயாரிப்புப் பிரிவு ஒன்றும் உள்ளது. இங்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதால் அதற்கேற்ப மருந்துகளின் உற்பத்தியையும் பெருக்க முடியாமல் இந்த மருத்துவமனை சிரமப்படுவதால், மருந்து உற்பத்திப் பிரிவை இயந்திர மயமாக்கும் திட்டம் ஏற்கெனவே மாநில அரசினரால் பரிசீலனை செய்யப்பட்டு முடிந்துவிட்டது.

இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 8 இலட்சம் நிதி உதவ முன் வந்திருக்கிறது. யுனானித் துறையில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுவது போலவே சித்த மருத்துவத் துறையில் சாந்தி வாத சூலை, புற்று நோய் முதலிய நோய்களுக்கும், பக்க வாதத்திற்கு ஆயுர்வேத முறையிலும் சிகிச்சை தர இங்கு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

''கஜ்ஜக் காய், புங்கங்கொட்டை ஆகியவை ஆஸ்த்மா நோய்ச் சிகிச்சைக்குப் பயனுள்ளவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆளிவிதை, தேன், தேற்றாங்கொட்டை, வெள்ளைப் பூண்டு முதலியவற்றின் கலவை, தீராத ஆஸ்த்மா நோயால் அவதிப்படுபவர்களுக்குச் சிகிச்சை தரப் பயனுள்ளதொரு மருந்து ஆகும்'' என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

முடக்குவாதச் சிகிச்சைக்கு நொச்சி ஏற்றது என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் நாம் அறிகிறோம்.

**புற்றுநோயைக் குணப்படுத்தும் 'நித்திய கல்யாணி'**

தேடுவார் இல்லாமல் காடுகளில் வளரும் ''நித்திய கல்யாணிச்'' செடியில் இருந்து இரத்தப் புற்று நோயைக் குணப்படுத்தும் மருந்து தயாரிக்கிறார்கள். இதனால் இந்தச் செடிகளுக்குக் 'கிராக்கி' உண்டாகி இருக்கிறது.

''நித்திய கல்யாணி'' என்ற பெயரைக் கேட்டால் ''மங்கல''மாக ஒலிக்கிறது. ஆனால் ''நித்திய கல்யாணிச்'' செடியின் பெயரைச் சொன்னதும் பலர் முகத்தைச் சுழித்துத் தங்கள் அருவெறுப்பைக் காட்டுவார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள ஆறு, வாய்க்கால் கரைகளிலும், காடுகளிலும், விதைப்பாரும் அறுப்பாரும் இன்றித் தானாகவே வளருவது இந்தச் செடி. இதில் மலரும் பூக்கள் ''கத்திரிப் பூ'' நிறத்தில் பார்க்கக் கவர்ச்சியாக இருக்கும். ஆனால், முகர்ந்து பார்த்தால் தாங்க முடியாத துர்நாற்றம் வீசும்!

அனைவரும் வெறுக்கும் இந்தச் செடிக்கு இப்போது புதிய ''மவுசு'' ஏற்பட்டிருக்கிறது.



புற்று நோய்களிலேயே கொடுமையானதாகக் கருதப்படும் இரத்தப் புற்று நோயைக் குணப்படுத்தும் சக்தி நித்திய கல்யாணிச் செடியில் இருப்பதாக நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

செடியின் வேரில் இருந்து இந்த மருந்து தயாரிக்கப்படுகிறது. ஒரு மில்லி கிராம் மருந்துக்கு 180 ரூபாய் வரை விலை ஆகிறது.

ஆகவே, இப்போது நித்திய கல்யாணிச் செடிகளை வேரோடு பிடுங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

இதனால் கிராமப் புறங்களில் உள்ள பெண்களுக்குப் புதிய தொழில் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

செடிகளைப் பிடுங்கிக் கட்டுகளாகக் கட்டி, அவற்றை வாங்கும் ''ஏஜெண்டு'' களிடம் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் எடை போட்டு வாங்கிப் பணம் கொடுக்கிறார்கள்.

நித்திய கல்யாணிச் செடி விற்பனையில் இலாபம் இருப்பதால் அதை ஒரு ''பயிர்'' போலவே வளர்க்கப் பலர் முன் வந்திருக்கிறார்கள். 6 மாதத்தில் செடிகளைப் பிடுங்கி விற்பனைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

நன்றாகப் பராமரித்தால் 1 ஏக்கர் நிலத்தில் 750 கிலோ வேர் கிடைக்கிறது. 1 கிலோ வேரை 8 ரூபாய் வரை விற்பனை செய்கிறார்கள். வேரின் நீளத்திற்கு ஏற்ப விலை கூடுகிறது.

இந்தியாவில் உள்ள செடிகள் மீது வெளிநாட்டு மருந்துக் கம்பெனிகள் மிகவும் அக்கறை காட்டுகின்றன. இங்கு வேர்களைக் கொள் முதல் செய்து அவற்றில் இருந்து ''சாறு'' எடுத்து அதை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் அந்தக் கம்பெனிகள் திட்டமிட்டிருக்கின்றன.



## இந்தியாவில் புதிய வகை ரயில் என்ஜின்கள்!

ரயில்வேத் துறையைச் சேர்ந்த டீசல் என்ஜின் தொழிற்சாலை ரயில்பாதைகளை மிகவும் தெளிவாகக் காணக்கூடிய புதிய வகை ரயில் எஞ்ஜினின் மாதிரி ஒன்றைத் தயாரித்திருக்கிறது.

ரயில்கள் மிகவும் வேகமாகச் செல்லும்போது பாதுகாப்பை முன்னிட்டு இந்தப் புதிய வகை ரயில் பயனளிக்கக்கூடியதும், முக்கியத்துவம் உடையதுமாகும்.

இந்த ரயிலின் காபினின் உள்ளே இருந்து பார்த்தால் ரயில்பாதையின் முழுத்தோற்றமும் மிகவும் தெளிவாகத் தெரியும். இதற்காகத் தற்போதுள்ள எஞ்ஜின் மூடிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள மெயின் லைன் டீசல் என்ஜின்களில், பக்கவாட்டில் உள்ள கண்ணாடிகள் மூலம்தான் ரயில்பாதையைப் பார்க்கமுடியும். இதனால் ரயில் ஓடிக்கொண்டிருக்கையில் என்ஜினின் இரு பக்கங்களிலிருந்தும், என்ஜின் டிரைவரும், உதவி டிரைவரும் குறிப்புகளை விரைவாகப் பரிமாறிக்கொள்வதன் மூலம்தான் ரயில்பாதை நிலவரத்தின் முழுத்தோற்றத்தையும், சிக்னல் குறிப்பு போன்றவைகளைத் தெளிவாக அறிய முடிகிறது.

புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள என்ஜினிலிருந்து டிரைவரும், உதவி டிரைவரும் காபினில் தாங்கள் இருக்கும் இடங்களிலிருந்தே ரயில்பாதையையும், சிக்னல் குறிப்புகளையும் முழுமையாகக் காணமுடியும். இனிமேல் ரயில்வேக்கள் தயாரிக்கும் மெயின் லைன் டீசல் என்ஜின்கள் அனைத்தும் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது போன்றே அமைந்திருக்கும்.

முதலமைச்சரின்

பொது நிவாரண நிதி

**4½ கோடி**

யைத் தாண்டி விட்டது!

31—1—1978 வரை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வசூலாகியுள்ள தொகை ரூ. 4,52,43,110.

# ஏழை எளியவர்களுக்கு இலவசச் சட்ட உதவி



**திரு. பி. இராமகிருஷ்ணன்,**
ஐ.சி.எஸ். (ஓய்வு),
தலைவர், தமிழ்நாடு சட்ட உதவி,
ஆலோசனை வாரியம்.

*ஏழை எளிய மக்களுக்கும், சட்ட உதவி தேவைப் படும் மக்களுக்கும், சட்ட உதவி-ஆலோசனை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு (Tamil Nadu State Legal Aid and Advice Board) ஒன்றினை 29-11-'76 அன்று தமிழக அரசு அமைத்தது. இக் குழுவானது, சென்னை உயர்நீதி மன்றத்தில் 1-7-'77 முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழு அளிக்கும் வசதி களையும், அந்த வசதிகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் அக் குழுவின் தலைவா அவர்கள் இக்கட்டுரையில் தெளிவாக விளக்கி யுள்ளார்.*

நீதி சில சந்தர்ப்பங்களில் தன் கண்கள் கட்டப்பட்ட வண்ணம் ஒரு துலாக்கோலை வைத்துள்ள ஒரு பெண் தேவதையாகக் கருதப் படுகிறது. இக்கருத்தின் அடிப் படை, நீதி எல்லோருக்கும் பொது வான முறையிலும் வறியோர், வசதி படைத்தோர், மேட்டுக் குடியினர், அடித்தளத்தினர் என்ற பாகுபாடின்றியும் வழங் கப்பட வேண்டும் என்பதாகும். சட்டத்தின் முன் அனைவரும் ஒன்றே என்று எல்லோருக்கும் தெரிந்த இந்தக் கொள்கை நம் அரசியலமைப்புச் சட்டம் 14-ஆம் பிரிவில் குடிகொண்டுள்ளது. இந்தச் சட்டத்தின் முன் அனை வரும் சமம் என்ற கொள்கை வறியவர்களுக்கு நீதி கிடைக்க—உதவியும் தக்க சந்தர்ப்பங்களும் அளிக்கப்பட்டாலே பயனுள்ள தாக முடியும் என்ற உணர்வும் அதிகரித்து வருகிறது.

நமது அரசியல் சட்டத்தின் 39-ஏ பிரிவில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்கள் அளிக்கும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. அப்பிரிவிலுள்ள தொகுப் பின்படி அரசு, சட்டமுறை எல் லோருக்கும் சமமான வாய்ப்புகள் தரும் அடிப்படையில் இயங்கு மாறு பார்த்துக் கொள்வதோடு, தக்க சட்டங்கள் இயற்றுவதன் மூலமும் திட்டங்கள் அல்லது மற்ற முறைகளைக் கையாள்வதன் மூலமும், குறிப்பாக இலவசச் சட்ட உதவி வழங்க, பொருளா தார வசதிக்குறைவு அல்லது வேறு இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி பெறும் வாய்ப்புகள் மறுக்கப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என ஏற்படுகின்றது.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்தைச் சங் கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப் பாக உருவாக்கியதன் மூலம் முதல் அடி எடுத்து வைக்கப்பட் டுள்ளது. தமிழக ஆளுநரும் தமிழ்நாட்டின் தலைமை நீதிபதி யும் இக்கழகத்தின் அமைப்பு விவரக் குறிப்பில் கையொப்ப மிட்டுள்ளனர். நிர்வாகத் துறை யின் முக்கிய அலுவலர்களும் சமுதாய நலத்துறையைச் சார்ந் துள்ளவரும் நீதித்துறையினரும் வழக்கறிஞர்களும் இவ்வமைப் பில் சேர்ந்துள்ளனர். தமிழக ஆளுநர் தலைவராகவும், தலைமை நீதிபதி பிரதான காப்பாளராக வும் சட்ட அமைச்சர் ஒரு காப் பாளராகவும், அட்வகேட் ஜென ரல், வருவாய்த்துறை வாரிய முதல் அங்கத்தினர், நிதித்துறை, சட்டத்துறை, சமுதாய நலத் துறை இவற்றின் செயலாளர்கள் ஆகியோர் கழகத்தின் நிர்வாகக் குழுவில், அவர்கள் வகிக்கும் பதவிகள் காரணமாக உறுப்பினர் களாக உள்ளனர்.

கழகத்தின் தலைவரான ஆளு நர் அவர்கள், ஓய்வுபெற்ற இரு உயர்நீதிமன்ற நீதிபதிகளை முறையே தலைமை நிர்வாகியாக வும் உதவித் தலைமை நிர்வாகி யாகவும் தற்போது பணியாற்றி வரும் ஓர் உயர்நீதி மன்ற நீதிபதியைக் கழகத்தின் ஆலோசக ராகவும் 1977 ஏப்ரலில் நியமித் தார். அதுமுதல், இக்கழகமானது, செயல்படத் தொடங்கியது. கழகத்தை அமைப்பதில் கழகத் தின் செயல் திட்டப்படி ஏழை களுக்கு அனுசரணையாகப் பயன் தர உதவும் வண்ணம், அரசு, நிர்வாகத்துறை, வழக்கறி ஞர்கள், தாழ்த்தப்பட்டோர் நலத்துறையினர் உள்ளிட்ட சமு தாயப்பணி புரியும் நிறுவனங்கள் அனைத்தும் இப்பணியில் ஈடுபடச் செய்வதில் முயற்சி மேற்கொள் ளப்பட்டுள்ளது. கழகத்தின் செலவினங்களைச் சமாளிக்கக் கணிசமான தொகை மானியமாக அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

**செயல்முறை :**

சட்ட உதவிக் கழகத்தின் திட் டத்தின் பின்னணி யாதெனில்,

ஏழைகள் மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் ஆகியோரின் பிரச்சினைகள் பெரும்பாலும் எளியவை; அவை நீதிமன்றம் செல்லாமலேயே தீர்க்கப்படக்கூடியவை என்ற அழுத்தமான நம்பிக்கையேயாகும். கழகத்தின் சட்ட உதவி மற்றும் ஆலோசனை அமைப்பு இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு மனுதாரரின் பிரச்சினை முதலில் மாவட்ட அல்லது வட்டக் குழுவினரால் பரிபாலிக்கப்படும் ஆலோசனை நிலையத்தினரால் பரிசீலனை செய்யப்படுகிறது. அங்கு தகுதி பெற்ற பொதுநல சேவா மனப்பான்மை கொண்ட கழகத்தாரால் பணிக்கப்படும் வழக்கறிஞர்கள் ஏழை மனுதாரர்களின் பிரச்சினைகளைக் கேட்டும் விவாதித்தும் வகைப்படுத்துகின்றனர்.

ஓர் ஏழையின் பிரச்சினைக்கு முடிவு காண, நீதிமன்றத்துக்குப் போகவேண்டிய அவசியமற்றதாயிருக்கலாம். அது வருவாய்த் துறையினர் சம்பந்தப்பட்டதாகவோ, காவல்துறையினர் சம்பந்தப்பட்டதாகவோ, சமுதாய நல நிறுவனங்கள் சம்பந்தப்பட்டதாகவோ அல்லது பல்வேறு சட்ட அதிகாரம் படைத்த மன்றங்கள் அல்லது அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்டதாகவோ இருக்கலாம்.

இந்த விஷயங்களிலும் ஆலோசனை நிலையம் பயனுள்ள பங்கு கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஆலோசனை நிலைய வழக்கறிஞர், பிரச்சனையை ஆராய்ந்து, பரிகாரம் தேவைப்பட்டால் அணுக வேண்டிய சரியான அதிகாரியைக் குறிப்பிடுவதோடு எந்தவிதப் பரிகாரம் கிடைக்குமோ அதையும் தெரிவித்து மனுதாரருக்குத் தன் பரிந்துரைகள் பற்றிய குறிப்பையும் வழங்க வேண்டும். இவ்வாறு பெற்ற பரிந்துரையோடு சரியான அதிகாரியிடம் சென்று, தனக்கு வேண்டிய பரிகாரத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கோரும்போது அரசுத்துறை அதிகாரிகள் ஆலோசனை நிலைய வழக்கறிஞரின் பரிந்துரைகளுக்குப் போதிய மதிப்பளிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இதன் பொருட்டு மாவட்டக்குழுக்களில் வருவாய்த்துறை, காவல்துறை, தொழில்துறை, அரிசன நலத்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளின் தொடர்பு மிக முக்கியமானதாகும்.

எனினும் ஓர் ஏழை மனுதாரரின் பிரச்சினை சட்டப் பிரச்சினையானால், அதைப் பரிசீலிக்கும் ஆலோசனை நிலைய வழக்கறிஞரின் முதல் முயற்சி, முடிந்தால் சம்பந்தப்பட்ட நபர்களிடையே சமரசம் செய்து வைப்பதாகும்.



ஓர் ஏழை, நீடித்த வழக்கு விவகாரத்தின் தொல்லைகளைத் தாங்க முடியாது என்பதும் தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களிருந்தாலொழிய நீதிமன்றம் செல்வது அவன் நலனுக்கு உகந்தது அல்ல என்பதும் நன்கு அறிந்ததே. சமரச முடிவு விரும்பத்தக்கது என ஆலோசனை நிலையம் கருதும்போது, எதிர்தரப்பினர் நிலையத்துக்கு வந்து பின்னால் நீதிமன்றத்தில் தான் எழுப்பும் வாதங்களைப் பாதிக்கா வண்ணம் பிரச்சினை குறித்து விவாதிக்கக் கோரப்படும்படி ஓர் நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தத் துறையில் நல்ல வரவேற்புக் கிட்டியுள்ளது. எனினும் சமரச முடிவுக்கான முயற்சி, தோல்வி கண்டும் மனுதாரருக்கு ஈடுபடக்கூடிய வழக்கு இன்னும் இருக்கும்போது, நீதிமன்றம் நாட உதவி கோரினால் கழகம் அவருக்கு நீதி மன்றத்தில் தேவையான நடவடிக்கைகள் தொடர உதவுவதுடன் அதற்கான செலவுகளையும் ஏற்கிறது. கழகம் ஏற்கெனவே சில தகுதியுள்ள விஷயங்களில் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர உதவி அனுமதித்துள்ளது.

ஒரு சட்டப் பிரச்சினையானது ஓர் அனுபவமிக்க வழக்கறிஞரின்



ஆலோசனை தேவைப்படும் சிக்கலான பிரச்சினை என்று ஆலோசனை நிலையத்தின் வழக்கறிஞர் உணரும்போது அவர் அதுகுறித்துத் தெரியப்படுத்துவார். அப்பிரச்சினை 'பி' பட்டியல் எனப்படும் முதுநிலை வழக்கறிஞர்கள் பட்டியலிலுள்ள ஓர் அனுபவமிக்க வழக்கறிஞர்களுக்கு அனுப்பப்படுகிறது.

## நிறைவேற்றுவதற்கான நிர்வாக அமைப்பு:

மாநிலக் கழகம் உச்சநிலை அமைப்பாகும். அதன் விவரம் முன்னதாக விவரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செஷன்ஸ் நீதிபதி உள்ள இடங்களில் சட்ட உதவி மற்ற ஆலோசனை மாவட்டக்குழு மாவட்ட செஷன்ஸ் நீதிபதியைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட நடுவர், வழக்கறிஞர் சங்கத் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர், மாவட்டத் தொழில் அதிகாரி, மாவட்ட அரிசனநல அதிகாரி, வட்டார நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் குழுவில் தாங்கள் வகிக்கும் பதவிகள் காரணமாக உறுப்பினராவர். தவிர, வழக்கறிஞர்கள் இருவரும், உள்ளூர் சமுதாய சேவை நிறுவனத்தைச் சேர்ந்த இருவரும், தாழ்த்தப்பட்ட பிரிவினர்—பழங்குடி மக்களில் ஒருவரும், உறுப்பினர் ஆவர். முடிந்தால் குழுவில் ஒரு பெண் உறுப்பினர் சேர்க்கப்பட வேண்டும். மாவட்டக் குழுவின் அலுவலகம் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தில் இருக்கும். குழுக்களில் ஒரு நிர்வாக உதவியாளர் உண்டு. ஆலோசனை நிலையங்களை மாவட்டக் குழுக்கள் பரிபாலிக்கின்றன.

## வழக்கறிஞர்கள் பட்டியல் :

ஒவ்வொரு குழுவும் இரண்டு பட்டியல்களை வைத்துள்ளன. ''ஏ'' பட்டியல் ஆலோசனை நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் இளம் வழக்கறிஞர்களைக் கொண்டது. அவர்களுக்கு ஓர் அடையாளத் தொகை சன்மானமாகத் தரப்படுகிறது. ''பி'' பட்டியல், கழகத்தின் குறிக்கோள்களைச் செயல்படுத்தத் தாமே வலிய முன்வரும் அனுபவமிக்க முதுநிலை வழக்கறிஞர்களைக் கொண்டது. ஆலோசனை நிலைய வழக்கறிஞர்கள் கடினமான விஷயங்களை அனுப்பி வைக்கும்போது அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அவர்களின் ஆலோசனைகளுக்குக் கட்டணம் கிடையாது. ஆலோசனை நிலைய

வழக்கறிஞர், ஒரு வழக்கு நீதிமன்றம் செல்லத் தகுந்தது எனப் பரிந்துரைக்கும்போது, அவர் மனுதாரர் வறியவரா, வழக்கு ஈடுபடக்கூடிய வழக்கா என்பதைத் தெரியப்படுத்துமாறு கோரப்படுகிறார். தேவையானால் அவ்வறிக்கை மாவட்டக் குழுத் தலைவர் அதற்கென நியமிக்கும் 'பி' பட்டியல் வழக்கறிஞரா லோ, குழுவின் அங்கத்தினரா யுள்ள வழக்கறிஞராலோ மேலும் ஆராயப்படுகிறது. இவ்வாறு ஆராயப்பட்டு, சட்ட உதவி பெறத் தகுதியுண்டு என்று தெரிந்தால் குழுத்தலைவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உதவி வழங்கி, ஏற்ற ஒரு வழக்கறிஞரைப் பட்டியலிலிருந்து நியமிக்கிறார். வழக்கறிஞருக்குக் கட்டணத்துக்கான விதிகளின்படி கட்டணம் அளிக்கப்படுவதோடு, மற்றத் தேவையான நீதிமன்றச் செலவுகளும் ஆரம்பத்தில் கழகத்தால் ஏற்கப்படுகின்றன.

தேவையைப் பொறுத்து மாவட்ட நீதிமன்றங்கள் உள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களிலும் ஆலோசனை நிலையங்களைத் துவக்க, கழகம் உத்தேசித்துள்ளது. தற்போதைக்கு ஆலோசனை நிலையங்கள் மாவட்டக் கழகங்களின் கட்டுப்பாட்டில் இருந்து வரும். முடிவில், வட்டக் குழுக்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்படலாம்.

ஏழை எளிய மக்களுக்கு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகமானது எவ்வெவ் வகையில் உதவி, ஆதாயம் பெறச் செய்துள்ளது என்பதற்குச் சில நேர்வுகளைக் கீழே காணலாம்.

திருமதி......தன் கணவனால் கைவிடப்பட்டு நீதிமன்றம் சென்று தனக்கு ஜீவனும்சம் கோரினாள்; கணவன் ஜீவனும்சம் தர மறுத்தான். மிகவும் ஏழையான அப்பெண், கழகத்தின் உதவியை நாடினாள். கழகம் ஒரு வழக்கறிஞரை அமர்த்தி ஜீவனும்சம் பெற்றுத்தர முயன்றபோது, பெண்ணின் கணவன் உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து ஜீவனும்ச உத்தரவு நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்கக் கட்டளை பெற்றிருந்தான் என்பது தெரியவந்தது. கழகம் அமர்த்திய வழக்கறிஞர் உயர்நீதி மன்றத்தில் வழக்கை விரைவில் முடிவு செய்யக் கோரி நடவடிக்கை எடுத்தார். அதன் விளைவாக மேலாய்வு மனு முன்னதாகக் கேட்கப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கில் திருமதிக்கு......வெற்றி கிட்டியது. இவ்வழக்கில் அளிக்கப்பட்ட உதவி பலனுள்ளதாயும் விரைவாயும் அமைந்தது.



மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமதி....குற்றயியல் நடுவர் நீதிமன்றத்தில் தனக்கு ஜீவனும்சம் அளிக்கும் உத்தரவு பெற்றிருந்தாள். அவள் கணவன் ஜீவனும்சம் தரவில்லை. திருமதி..... ஜீவனும்சத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு ஏழை. அவள் கழகத்தின் உதவியை நாடினாள். கழகம், ஜீவனும்ச பாக்கித் தொகையைப் பெற்றுத்தர ஒரு வழக்கறிஞரை அமர்த்தியது. குற்ற விசாரணை நடைமுறைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நீதிமன்றம் தன் கட்டளைகள் மூலம் ஓராண்டு வரையுள்ள பாக்கியையே தர இயலுமாதலால் ஓராண்டு ஜீவனும்ச பாக்கித் தொகைக்கான கட்டளை பெறப்பட்டது. கழகம், இப்பெண்ணுக்காக உரிமை வழக்கு மன்றத்தில் முந்திய ஆண்டுகளுக்கான ஜீவனும்சத் தொகை பாக்கியை வசூலிக்க வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது.

துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் பணியாற்றிய காலஞ்சென்ற ஒருவரின் மகள் எனப்படும் திருமதி....தன் தகப்பனுருக்குச் சேரவேண்டிய தொகைகளில் தன் பங்கினைப் பெற்றுத்தருமாறு இக்கழகத்திடம் கோரினாள். இறந்துபோன நபரின் வாரிசுகள் என்று உரிமை மனுச் செய்து கொண்டோருக்கு அந்நபரின் தொகைகள் கொடுக்கப்பட்டு விட்டதாகத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தினரிடமிருந்து தெரியவந்தது. சென்னை மாவட்ட சட்ட உதவி மற்றும், ஆலோசனைக் கழகத்தின் ஆலோசனை நிலையத்தின் வழக்கறிஞரால் திருமதி....யின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. இறந்துபோனவரின் மகள் தான் தான் என்று அவள் கூறிக் கொண்டதை சட்டப்படி சரி என்று முடிவு செய்வதில், சற்றுச் சிக்கல் இருந்தது. இறந்து போனவரின் வாரிசுகளென்பதாக அவரின் தொகைகளைப் பெற்றுச் சென்றுவிட்டவர்கள் ஒரு சமரச முடிவு காணும் சாத்தியக் கூறுகளை ஆலோசனை செய்ய நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டார்கள். அவர்களும் வந்தனர். வழக்கறிஞரோடு ஆலோசனைகள் நடத்தியபின் ஒரு தொகையை திருமதி ....க்குக் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டு அவ்வாறே சம்பந்தப்பட்ட நபர்கள் மகிழ்ச்சியடைந்ததோடு, நீண்ட பண விரயமாவதும் வழக்குத் தொடர்வதும் தவிர்க்கப்பட்டன.



காலஞ்சென்ற தன் கணவரின் முதல் மனைவியின் மக்கள் தன் கணவனின் சொத்துக்களை வைத்துக் கொண்டு தன் பங்கைத் தர மறுப்பதாகத் திருமதி..... கழகத்திடம் வந்து கூறினாள். கழக ஆலோசனை நிலையத்திலிருக்கும் வழக்கறிஞர் இக்குடும்ப விவகாரம் சமரசமாக முடிவு செய்யப்படலாம் எனக்கருதினார். முதல் மனைவியின் மக்கள் நிலையத்துக்கு வருமாறு கோரப்பட்டு அவர்களும் அவ்வண்ணமே நிலையத்துக்கு வந்தனர். அவர்களிடம் சமரச முடிவு எல்லோர் நலன்களுக்கும் உகந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. கழக வழக்கறிஞர் பாரபட்சமற்ற நபர் என்பதை அவர்கள் தெரிந்திருந்தனர். எனவே அவர்கள் விவாதிக்க உடன்பட்டனர். இருதரப்பினரும் அநேக முறைகள் கலந்து பேசி, இறுதியாக எல்லோருக்கும் திருப்தியளிக்கும் வகையில் சச்சரவு, தீர்வு காணப்பட்டு உடன்பாட்டு விவரங்கள் ஆலோசனை நிலைய வழக்கறிஞரால் முறையாகச் செய்யப்பட்டு உடன்பாட்டின்படி தேவையான பத்திரங்கள் எழுதி முடித்துப் பதிவு செய்யப்பட்டன.

திருமதி....கணவனைப் பிரிந்து சில காலம் வாழ்ந்து வந்தவர். அவர் கழகத்தை அணுகி, தன் கணவர் மீது தன்னைப் புறக்கணித்தமைக்குப் பரிகாரம் தேடிச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரினார். நம் ஆலோசனை நிலைய வழக்கறிஞர் கணவன் மனைவியரிடையே சமரசம் ஏற்படுத்த எண்ணினார். கணவன் வருமாறு அழைக்கப்பட்டார். அவரும் அவருடன் குடும்பத்தினரும் வந்தனர்.

நம் நிலைய வழக்கறிஞர், குடும்பத்தினர் எல்லோருடனும் அவர்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசினார். பெரும்பாலானவை உணர்ச்சிபூர்வ சிக்கல்களாகவேயிருந்தன. எல்லோரும் மனம் விட்டு அவை குறித்து விவாதித்தனர். மனவேறுபாடுகளைக் கடந்து கணவன் மனைவி ஒருமித்து வாழ முடிவு செய்தனர்.

திரு....என்பவருக்கு வயது இருபது; புகுமுக வகுப்பு வரை படித்தவர். அஞ்சல் துறையில் தேவைக் காலத்துக்கான (Casual Hand) பணியாளராக இருப்பவர். அவருடைய தந்தைக்கு மேலும் மூன்று குழந்தைகள் உண்டு. அவரும் கொல்லத்து வேலை செய்யும் ஓர் ஊழியர். இருபது வயதான அவருடைய மகன்.....பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றின் காரணமாக ஏற்பட்ட விபத்தில் மரணமடைந்தார். பையனின் பெற்றோர் உதவி கோரிக் கழகத்தை நாடினர். கழகத்தின் வழக்கறிஞர் பட்டியலிலிருந்து ஒருவரை நியமித்து ஈட்டுத்தொகை கோரி, உரிமைக் கோரிக்கைகள் தீர்வு மன்றம் முன்பு கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல் முறையீட்டைத் தொடர்ந்த மேல் முறையீட்டாளர் முறையீடு பாதிக் கட்டத்திலிருக்கும் போதே வழக்கறிஞர் தம்மை விடுவித்துக்கொண்டு விட்டார். காரணம் மேற்கொண்டு தொடர்ந்து நடத்தப் பண உதவி தரப்படவில்லை என்பதாகும். அவர் இதை உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். உயர் நீதிமன்றம் வழக்கினைச் சட்ட உதவிக் கழகத்துக்கு உதவி தருவதற்காக அனுப்பி வைத்தது. பட்டியலிலிருந்து ஒரு வழக்கறிஞர், மேல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்த அமர்த்தப்பட்டுள்ளார்.

ஜீவனும்சம் போன்ற பெண்களின் பிரச்சினைகள் கழகத்தால் கவனிக்கப்படுகின்றன. ஏராளமான மனுதாரர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. பேருந்து விபத்துக்களில் பலியாவோருக்கு உதவி செய்யும் திட்டம் ஒன்றையும் கழகம் மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகரில் இரு வழக்குகளிலும் கோவையில் ஒரு வழக்கிலும் கழகம் உதவி வழங்கியுள்ளது.

இவ்வாறு, ஏழை எளியவர்களுக்கு இலவசச் சட்ட உதவி அளிப்பதில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஆக்கபூர்வமான பணியாற்றி வருகிறது.

# மகத்தான நாட்டினை உருவாக்கிட...

## ஆளுநர் வேண்டுகோள்

தமிழக மக்களின் பேராதரவு பெற்ற அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், பாராட்டத்தக்க வகையில் சுறுசுறுப்பாக இயங்கி அண்டை மாநிலத்திலிருந்து தண்ணீரைக் கோரிப் பெற்று, வாடிக் கொண்டிருந்த பயிரைக் காப்பாற்றியதோடு, தமிழகத்தின் பொருளாதார வாழ்வுக்கு முதுகெலும்பாக விளங்கும் சம்பா பயிர் விளைச்சலுக்கும் ஏற்பாடு செய்தது. அதே போல் தென் பகுதி மாவட்டங்கள் எல்லாம் புயலினால் பாதிக்கப்பட்டபோதும், அரசு, மக்கள் துயர் தீர்க்கச் சுறுசுறுப்பாகச் செயல்பட்டது. புயலும், வெள்ளமும் விளைவித்த சேதம் இதுவரை கேட்டறியாத அளவுக்கு இருந்தது. தமிழக மக்கள் ஒன்று சேர்ந்து, அரசின் துயர்துடைக்கும் பணிகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டினர். தமிழகம் பெருந் துயரத்தில் சிக்கிய போது, இந்தியா முழுதும் அவர்கள் துயரத்தில் பங்கு கொள்ள முன் வந்தது.

இத்தகைய விலை மதிக்கவொண்ணு தார்மீக ஆதரவு பெற்றதில் தமிழகம் பெருத்த ஆறுதல் பெற்றது. இதுவரை கேட்டறியாத துன்பம் எப்படி நமக்குச் சம்பவித்ததோ, அதே போல், தேசத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தமிழக மக்களுக்கு நிதியுதவி வந்து குவிந்தது. பாரதம் ஒன்று என்பது அவர்கள் அனுதாபத்திலிருந்து நமக்கு வெளிப்பட்டது. மத்திய அரசு உடனடியாக நமக்கு உதவ முன் வந்தது.

தமிழக அரசின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம், கிராமங்களில் வேலையற்றவர்களுக்கும், போதிய வேலை இல்லாதவர்களுக்கும், கிராமக் கைத்தொழில் வினைஞர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கத் திட்டம் வகுக்கிறது. கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களை முற்றும் பயன்படுத்தி கிராமப் பகுதிகளில், வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டும் என்று கிராமக் கைத்தொழில் வாரியம் தீர்மானித்திருக்கிறது. ஆகவே, இந்தக் குடியரசு நன்னாளில் நம் கிராமங்களிலுள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு வேலையளிக்க நாம் கதர்த் துணிகளையே உடுக்க, உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தின் வேற்றுமைகள் ஏற்றத் தாழ்வுகள், நேர்மையற்ற நிலைகள் யாவையும் நீக்குவதில் அரசு ஆற்ற வேண்டிய பணி மிகப் பெரிய பணி என்பதில் ஐயமில்லை. ஆனால், அதனை, பொது மக்களின் பூரண ஒத்துழைப்புடன் தான் வெற்றிகரமாக நடத்த முடியும். ஏழ்மையையும், லஞ்ச ஊழலையும் போக்கப் பல முனைகளிலின்று முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். மதுவிலக்குத் திட்டம் முழுவெற்றி அடையச் செய்ய வேண்டும். துயரத்திலிருக்கும் நம் சகோதாரர்களுக்கும் சகோதரிகளுக்கும் எப்பொழுதும் உதவ வேண்டும். மகத்தான நாட்டினை உருவாக்க உறுதி கொள்வோமாக. பாரதக் குடியரசு நீடூழி வாழ்க.

--சென்னை வானொலியில் 21-1-78 அன்று ஒலிபரப்பப்பட்டது.



# திரைப்படத் திருவிழா—நிறைவு விழா!

சென்னை கலைவாணர் அரங்கில் உலகத் திரைப்பட விழாவின் நிறைவு நாள் விழா 17-1-1978 மாலை நடைபெற்றது.

குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜாட்டி, மத்திய அமைச்சர் திரு அத்வானி, மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். மாண்புமிகு தமிழகச் செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன், மற்றும் கலை உலகப் பெரியோர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

மத்திய அமைச்சர் திரு அத்வானி தனது வரவேற்புரையில் கூறியதாவது:

'திரைப்படத் திருவிழாக்களை அரசே ஏற்பாடு செய்வதைவிட திரைப்படத் துறையினரே ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்தால் அவர்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்யும்''

விழாவுக்குத் தலைமை வகித்த மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், ''மேல் நாட்டுத்திரைப்படங்களில் உள்ள நல்ல அம்சங்களை மட்டும் நாம் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. நமது நாட்டிற்கெனத் தனிக் கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் உள்ளன. அவைகள் நமது திரைப்படங்களிலும் இடம் பெற வேண்டும். நமது சமூகம் வளரவும், முன்னேறவும் கூடிய வகையில் திரைப்படங்கள் உருவாக வேண்டும்.

''திரைப்படங்களால் வன்முறைகள், குற்றங்கள் பெருகுவதாகவும் ஆபாசக் காட்சிகளால் இளைஞர்கள் கெட்டு விடுகிறார்கள் என்ற புகாரும் பெருகிவருகிறது. இதற்கு இடமில்லாத வகையில் செய்ய வேண்டும்.

''தாயும்—மகளும், தந்தையும்—மகனும் சேர்ந்து படம் பார்க்கும் வகையில் நமது திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்'' எனக் கருத்துத் தெரிவித்தார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜாட்டி அவர்கள் சிறப்புரையாற்றினார்:

''திரைப்படம் மூலம் அறிவைப் பெருக்கவும், நுண்கலைகளை வளர்க்கவும் முடியும். கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் ஒரு பாலமாக நின்று பல்வேறு இன மக்களை ஒன்றுபடுத்தவும் திரைப்படக் கலையினால் முடியும். அதே போன்று கீழ்த் தர உணர்ச்சிகளைப் பகட்டாகக் காட்டித் தொன்மையான கலைப்பண்பாட்டுச் சாதனைகளை நாசமாக்கவும், திரைப்படங்கள் பயன்படும்.

''இந்த- உலகத் திரைப்படத் திருவிழாவில் மனிதர்களின் ஒழுக்கம், இலட்சியங்கள், பண்புகள், உண்மை, அழகு ஆகியவை உயர்வாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. திரைக்கலையின் மூலம் மனிதனின் மேன்மை நிலைநாட்டப்படும்'' என்றார் அவர்.

மாண்புமிகு தமிழகச் செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் திரு



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை
# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517



மத்திய அமைச்சர் திரு அத்வானி அவர்களின் வரவேற்புரை.



தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களின் தலைமையுரை



தமிழக செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வீரப்பன் அவர்களின் நன்றியுரை

ஆர். எம். வீரப்பன் அவர்கள் நன்றியுரை கூறினார். அவர் கூறியதாவது:

''இந்தத் திரைப்பட விழாவிலே கலந்து கொண்டோர் அனைவருக்கும் நிறைவு நாள் விழாவையொட்டி விழாக் குழுவின் சார்பில் நன்றி தெரிவிக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக, தமிழக அரசின் சார்பிலே, நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திரைப்பட விழா இத் தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், பொதுமக்கள் ஆகிய எல்லாத் தரப்பினருக்கும் மகிழ்வையும், புதிய உணர்வையும் அளித்து இன்று நிறைவுக்கு வந்துள்ளது.

''தமிழகத்தின் தலைநகரான சென்னையை இத் திரைப்பட விழாவிற்குத் தேர்ந்தெடுத்ததற்காக இந்தியப் பேரரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தென்னகத்தில் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 300 படங்கள் — தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தயாராகின்றன. தென்னகம் பல்வேறு நுண்கலைகளிலும் சிறந்து விளங்குவதில் நீண்ட நெடிய வரலாற்றை உடையது என்றாலும், திரைப்படத் துறையில் தென்னகம், குறிப்பாகச் சென்னை மாநகரம் இந்தியாவில் மிகச் சிறந்த இடத்தை வகித்து வருவதை இந்திய மக்கள் அறிவார்கள். அதை அங்கீகரிக்கும் முறையில் முதன் முறையாக, ஒரு உலகத் திரைப்பட விழாவை இந்திய அரசும் உலகத் திரைப்பட விழா நிர்வாக நிறுவனமும் தமிழகத்தின் தலைநகரில் நடத்தியது தென்னகத் திரையுலகம் எண்ணிப் பெருமைப்படக் கூடிய ஒன்றாகும்.

''மக்களது உள்ளங்களை ஈர்த்து அவர்கள் வாழ்க்கை முறைகளையே மாற்றி அமைக்கும் அளவிற்கு வலிமை பெற்ற திரைப்படக்கலை, அப்படிப்பட்ட ஆற்றல் மிக்க கலை எந்தெந்த நாட்டில் எப்படிக் கையாளப்படுகிறது என்பதை எல்லா நாட்டினரும் தெரிந்து கொள்ளவும், இந்த விழா பயன்படுகிறது. சென்ற 15 நாட்களாக வெளிநாட்டுத் திரைப்படங்களைப் பார்த்த நடிகர், நடிகைகள், எழுத்தாளர்கள், திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள மற்ற கலைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் யாவருக்கும் இது ஒரு புது அனுபவமாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு நாட்டிலும் கையாளப்படும் புது முறைகளையும், நுணுக்கங்களையும் ஆய்ந்து சிந்தித்துப் பார்க்கும் நல்லதொரு வாய்ப்பும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

''23 வெளிநாடுகளிலிருந்து திரைப்படங்கள் வந்துள்ளன. 16 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர். இந்த நாடுகளுக்கும் பிரதிநிதிகளுக்கும் இந்திய நாட்டின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவில் தலைசிறந்த சில இயக்குநர்களின் படங்களை ஒரு சேரப் பார்த்து ஆய்வு செய்ய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தினர். கிரேக்க நாட்டினைச் சேர்ந்த மைக்கேல் காக்கோயனிஸ், பிரெஞ்ச் நாட்டினைச் சார்ந்த ஜாக்கஸ் டாட்டி, அமெரிக்காவைச் சார்ந்த எமில் டி அண்டோனியா, இந்தியாவைச் சார்ந்த ரிட்விக் கடக் ஆகியோரின் அரிய படைப்புகளைப் பார்க்க வாய்ப்பு ஏற்படுத்தினர்.

''இந்த விழா நடைபெறுகிற தமிழகத்திற்கு உள்ள மற்றொரு சிறப்பை இந்த நேரத்தில் வெளியிடுவது மிகப் பொருத்தமுடையதாக இருக்குமென நம்புகிறேன். திரைப்படத் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நிகரற்ற மாபெரும் புகழோடு விளங்கும் மாபெரும் கலைஞர் ஒருவர் மாநில ஆட்சிப் பொறுப்பின் தலைவராக —முதல்வராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வரலாற்றைத் தமிழகம்தான் உலகத்துக்கு வழங்கியுள்ளது. ஒரு கலைஞர் அரசியலில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற முடியும் என்ற வரலாற்றை உருவாக்கியுள்ள தமிழகத்தின் தலைநகரில் இந்த விழா நடைபெறுவது உலகத் திரைப்படக் கலைஞர் சமுதாயத்திற்கே பெருமை சேர்ப்பதாகும்.

அவ் வரலாற்று நாயகன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நான் பொறுப்பேற்றுள்ள செய்தித் துறையின் சார்பிலும் மீண்டும் எனது நன்றி கலந்த வணக்கத்தை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இறுதியாக, இந்த விழா வெற்றியடைய ஒத்துழைத்த தலைநகரத் தமிழ்ப் பெரு மக்களுக்கும் ரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்".

"இந்தத் திரைப்பட விழா தமிழகத்தின் தலைநகரில் வெற்றிகரமாக நடந்து முடிந்ததற்குக் காரணமாக இருந்ததற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு, மத்திய அமைச்சர் திரு அத்வானி அவர்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்கள்.

"தமிழக முதல்வர் அவர்கள் கலைக்கும் தமிழ் மக்களுக்கும் இந்தியத் திருநாட்டுக்கும் உரியவர்.

"நல்லெண்ணத்தோடு மத்திய அமைச்சர் அத்வானி அவர்கள், முதல்வர் அவர்கட்குத் தெரிவித்த பாராட்டுக்கு அவருடைய சார்பிலும் தமிழக அரசு சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்".

இவ்வாறு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் கூறினர்.

உலகத் திரைப்படத் திருவிழா நடப்பதை யொட்டி, திரையரங்கினை அலங்கரித்து விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்ததற்காக 'ஈகா' திரையரங்கிற்கு முதல் பரிசும், இரண்டாவது சிறந்த திரையரங்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'அபிராமி' திரையரங்கிற்கும் உரிய கேடயங்களை உரிமையாளர்களிடம் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜாட்டி வழங்கினர்.

விழாவின் துவக்க விழாவும், நிறைவு விழாவும் சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்ததற்காகக் கலைவாணர் அரங்கிற்கு வழங்கப்பட்ட கேடயத்தைக் குடியரசுத் தலைவர் திரு ஜாட்டியிடமிருந்து செய்தித் துறை இயக்குநர் பெற்றுக் கொண்டார்.

விழா முடிவில் இந்தியக் குழந்தைகள் பட நிறுவனம் தயாரித்த LOUSE STORY கார்ட்டூன் படமும், 'எ பிரிட்ஜ் டூ ஃபார்' என்ற இரண்டாவது உலகப் போர்ப் பின்னணியில் எடுக்கப்பட்ட படமும் திரையிடப்பட்டன.

# வறுமையில் வாடிடும் மக்களுக்கு வாழ்வளிப்பதே முதற் கடமை!

இன்று நாடு குடியரசு நாளைக் கொண்டாடுகிறது. நாட்டின் குடியாட்சி அமைப்புக்கு நம் மக்கள் மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே நம்முடைய மாபெரும் தலைவர்கள சுதந்தரத்துக்காகப் போராடினர்கள்.

புதியதோர் சகாப்தம் உதயமாகும் என உறுதி கூறினர்கள். இதை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தப்பட்டன. அதன் விளைவாக நாடு பல்வேறு துறைகளில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்தது.

ஆனல் அந்தப் பலன், கிராமங்களையும் ஏழை எளிய மக்களையும் சென்று எட்டவில்லை. அவர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இதனைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு வந்துள்ளார்கள்.

குடி நீர் போன்ற அடிப்படை வசதிகள் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலை இனியும் நீடிக்கவிடக் கூடாது.

இந்த அநீதியை எதிர்த்துப் போராடவும், சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து கிராமப் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடவும் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

வறுமையில் வாடி வதங்கும் கோடிக்கணக்கான மக்களை எப்படி முன்னேற்றி, சமூகத்தில் அவர்களை உயர்த்துவது என்பதில்தான் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம். நல்வாழ்வுத் திட்டங்களில் இம் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சுதந்தரம், ஜனநாயகம் என்பதற்குப் பொருள் இருக்க முடியும்.

கிராம முன்னேற்றத்தையும் விவசாய வளர்ச்சியையும், நோக்கமாகக் கொண்ட திட்டங்களின் முக்கியத்துவத்தை இந்திய அரசும் வலியுறுத்தி வருகிறது. மத்திய மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த ஒருமுகமான நடவடிக்கைகளால் ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் விடிவு ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

நமது குறிக்கோளில் உறுதி கொண்டு வளமான இந்தியாவை உருவாக்க இந்த நல்ல நாளில் நாம் மீண்டும் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோமாக.

—தமிழக முதல்வர் அவர்கள், குடியரசு நாளையொட்டி விடுத்த செய்தி.



# விருது வழங்கும் விழா

குடியரசு தினத்திற்கு முந்திய நாள்! ஜனவரி 25! மாலை நேரம்; ராஜாஜி மண்டபத்திலிருந்து ஒலித்துக் கொண்டிருந்த நாதசுர இசை, அரசினர் தோட்டத்தின் பல பகுதிகளிலும் எதிரொலித்துக் கொண்டிருந்ததுடன், மண்டபத்தின் உள்ளே நடைபெறப் போகும் விழாவுக்குக் கட்டியம் கூறுவதுபோலவும் அமைந்திருந்தது.

மண்டபத்தின் தலைவாசலில் நீதிபதி கோகுலகிருஷ்ணன் அவர்களும், நடிகமணி திரு டி. வி. நாராயணசாமி அவர்களும் வருவோரை முகமலர்ந்து வரவேற்றுக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்தபோது, தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடக மன்றம், பல்துறைகளைச் சார்ந்த கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கும் விழாதான் அது என்பது எளிதில் விளங்கிவிட்டது.

இசை, நாடகம், நாட்டியம், கிராமியக்கலை எனப் பல்வேறு துறைகளிலும் புகழ்பெற்ற 34 கலைஞர்களுக்கு விருது வழங்கும் அற்புதக் காட்சியைக் காண்பதற்கு மக்கள் ஆர்வத்துடன் திரண்டிருந்தார்கள். அனைவரும் அமர்வதற்கு அங்கே இருக்கைகள் கிடைக்கவில்லை என்றபோதிலும், கலைஞர்களுக்கு வழங்கும் விருதையும் பாராட்டையும் பார்த்து மகிழ்ந்திட வேண்டும் என்ற நல்லுணர்வின் காரணமாக, ஏராளமான கலை ரசிகர்கள் இறுதி வரை நின்று கொண்டே இருந்ததைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவுக்குத் தலைமை வகிக்க, தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா துவக்கம் ஆகியது.

விழாவுக்குத் தலைமை ஏற்று, கலைஞர்களுக்குப் பதக்கங்களை வழங்குவதற்கு வந்திருந்த ஆளுநர் அவர்களையும், கலைஞர்களுக்குப் பட்டம் வழங்கி வாழ்த்துரைக்க வந்திருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், கலைமாமணி விருது பெறும் கலைஞர்களையும், இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் நீதிபதி பு. ரா. கோகுலகிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார். வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டதாவது:

''ஒரு மனிதனிடம் கருணை, அன்பு ஆகிய குணங்கள் இடம் பெற்றால்தான் அவன் முழு மனிதனாக முடியும். ஒரு மனிதனை அவனது எண்ணத்தை-அவனிடமுள்ள அறிவுதான் பிரதிபலிக்கிறது என்பது நாட்டிலுள்ள நல்லவர்களின் கண்டுபிடிப்பு.

''கலையுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த கலைஞர்களைப் பாராட்ட வேண்டும் - பெருமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தமிழகத்து மக்களுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் கலைஞர்களுக்கு விருது வழங்கும் பணியைப் பல்லாண்டுகளாக ஆற்றிவருகிறது.

''கடந்த 11 ஆண்டுக் காலமாக, கலைமாமணிகள்தான் தமிழ்நாட்டு ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். 1967ல் தமிழக முதல்வராக ஆன பேரறிஞர் அண்ணா அவர்கள் 1964-ஆம் ஆண்டில் கலைமாமணி விருது பெற்றவர்கள். அண்ணாவுக்குப் பின் முதல்வராக வந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் 1967-ஆம் ஆண்டு கலைமாமணி விருது பெற்றவர்கள். தற்போது முதல்வராக இருக்கும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் 1964-ஆம் ஆண்டு கலைமாமணி விருது பெற்றவர்கள்.

''இயல் இசை நாடக மன்றம் ஜனநாயக முறையிலே இயங்கிக் கலையை வளர்த்து வருகிறது''.

வரவேற்புரைக்குப் பின்னர், செயலாளர் திரு டி. வி. நாராயண சாமி அவர்கள் மன்றத்தின் அறிக்கையைப் படித்தார். தமது அறிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைப்பணி செய்யும் தலைசிறந்த நிறுவனம் ஆகும். மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமியின் குறிக்கோளை நமது மன்றம் நிறைவேற்றி வருகிறது. இதற்குத் தமிழக அரசும் நிதி உதவி செய்து வருகிறது. இன்று வழங்கப்படும் விருதுகளையும் சேர்த்து, (1954ஆம் ஆண்டிலிருந்து) இது வரை 426 கலைஞர்களுக்கு, இந்த மன்றம், கலைமாமணி விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது.''

இவ்வாறு குறிப்பிட்ட செயலாளர், சில கோரிக்கைகளையும் தெரிவித்தார். அவை வருமாறு:

''கலைமாமணி பட்டம் பெறுபவர்களுக்குத் தற்போது தங்கப் பதக்கமும் பட்டமும்மட்டும்தான் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகையும் வழங்க வேண்டும்.

''வங்கத்தில் உள்ளது போல் தமிழ்நாட்டிலும் நிரந்தர நாடகக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக அடுத்த 5 ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாயாவது அரசு ஒதுக்க வேண்டும்.

''இயல், இசை, நாடக மன்றம் கர்நாடக இசைக் கல்லூரிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் ஒட்டுக் குடித்தனம் செய்து வருகிறது. ஆகையால் மன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் தேவை.

''மாவட்டத் தலைநகரங்களில் நாடகங்களை அரங்கேற்றுவதற்குக் கலை அரங்குகள் அமைக்கப்பட வேண்டும்.''

செயலாளரின் அறிக்கைக்குப் பின்னர், மறைந்த கலை மேதைகள் 14 பேர்களின் உருவப் படங்களை மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

படத் திறப்புக்குப் பின்னர், கலைத் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த 34 கலைஞர்களுக்கு மேதகு ஆளுநர், பதக்கங்களை அணிவித்துச்சிறப்பித்தார். அவர்களுக்கெல்லாம் விருதுகளை முதல்வர் வழங்கினர்.

சிறந்த நாடகத் தயாரிப்பாளருக்காக, மேதகு முன்னள் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் வழங்கிய சுழற் கேடயத்தை 'சுக்ராச்சாரியார்' நாடகத் தயாரிப்புக்காக திரு ஆர். எஸ். மனேகர், முதல்வரிடமிருந்து பெற்றுர். இயல் இசை நாடக மன்றமும், மனேகர் அவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தது.

கலைமாமணி விருது வழங்கிய நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவரின் நெஞ்சங்களையும் தொடக் கூடிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலை மேதைகளில் நலிந்த நிலையில் உள்ள எட்டுப் பேர்களுக்கு ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை முதல்வர் வழங்கிச் சிறப்பித்த நிகழ்ச்சிதான் அது.

பொற்கிழியைப் பெற்றுக் கொள்வதற்கு வந்திருந்த கலைஞர்களில் சிலர், உடல் தளர்ந்திருந்த போதிலும் உள்ளம் தளராது வந்து பொற்கிழி பெற்றபோது, அவர்களது முகங்களில் எல்லாம் நன்றிப் பெருக்கின் ரேகைகள் தலை நீட்டுவதைக் காணமுடிந்தது.

அதன் பின்னர், விருது பெற்றவர்களையும், பொற்கிழி பெற்ற மேதைகளையும் மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டிப் பேசினர்.

தமது பாராட்டுரையின் அவர் குறிப்பிட்டதாவது :

''இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம்போன்றதுறைகளின் மூலம் கலாச்சாரப் பணி செய்யும் கலைஞர்களுக்கு நமது பாராட்டுகளை — வாழ்த்துக்களை —மரியாதைகளைத் தெரிவிக்க நாம் இங்கே கூடியிருக்கிறோம். தமிழ்நாடு அரசு கலைஞர்களைத் தக்க வகையில் மதித்துப் போற்றுகிறது.

''இந்தக் கலைஞர்கள் பல்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள். சிலர் இசைக் கலைஞர்கள் — சிலர் இசைக் கருவிகளை இயக்கும் கலைஞர்கள். இவர்களில் பலர் நமது நாட்டின் ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் சென்று தங்கள் கலைத் தொண்டைச் செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கலையின் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள். சுருக்கமாகச் சொன்னுல் அவர்கள் நமது நாட்டின் கலாச்சாரத் தூதுவர்கள்.

''இங்கே அவர்கள் விருதுகளைப் பெற்ற போதும், உதவித் தொகை பெற்ற போதும் மக்கள் மன மகிழ்ந்து ஆரவாரம் செய்த செயல், மக்களுக்கு அவர்களிடம் உள்ள மரியாதையை எடுத்துக் காட்டுகிறது.

''ஒரு கலைஞன் தனது வாழ்க்கைக்காக மட்டுமல்ல—கலைக்காகவும் வாழ்கிறான். நமது கலைஞர்கள் எல்லாரும் புகழ் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் நமது நாட்டின் ஏனைய பகுதிகளுடன் நல்ல உறவை உருவாக்கி வருகிறார்கள். அவர்கள் நமது நாட்டின் ஒருமைப் பாட்டை மட்டுமல்ல — உலக ஒருமைப் பாட்டையும் காத்து வருகிறார்கள். கலைஞர்களுக்கு —மொழித் தடையே கிடையாது. அவர்கள் மனித இனத்தின் பிரதிநிதிகளாகக் குரல் கொடுக்கிறார்கள். இத்தகைய கலைஞர்கள், வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துகிறேன்''.

ஆளுநரின் உரைக்குப் பிறகு, விருது பெற்ற கலைஞர்களின் சார்





பில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் நன்றி கூறினர். தமது நன்றியுரையில் அவர் குறிப்பிட்டார் :

''இன்று முத்தமிழ் விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர்களுக்குப் பாராட்டு விழா தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொண்டு செய்து தளர்ந்து போன கலைஞர்களுக்குப் பொற்கிழி தரப்படுகிறது. இதைக் கண்டு கலைஞர்கள் எல்லாருமே மகிழ்கிறோம்.

''உலகத்தில் உள்ள மொழிகளில் எந்த மொழியும் இரண்டு பிரிவாகக் கூட வகுக்கப்படவில்லை. தமிழ் மொழி ஒன்றுதான் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாகச் சிறப்பிக்கப்படுகிறது.

''எண்ணம், துணிவு, செயல் என்ற மூன்று இயல்புகளை எடுத்து உரைப்பதுதான் இயல், இசை, நாடகம் என்னும் முப் பிரிவுகள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பிரிவுகளை நமது முன்னோர் வகுத்திருக்கின்றனர்.

''மூன்று தமிழுக்கும் இணையாக பலா, மா, வாழை என்ற முப்பழங்களையும் கூறலாம்.

''தோலை மிக எளிதாக உரித்துத் தின்ன உதவுவது வாழைப் பழம் ஆகும். இதுதான் நாடகம். இது மனிதர்களுக்கு எளிதில் புரியக் கூடியது.

''மாம்பழத்தின் தோலைக் கத்தி கொண்டு நறுக்கிச் சாப்பிட வேண்டும். அதுதான் இசைக்கு இணை!

''இயல் பலாப் பழம் போல! சொர சொரப்பான மேல் பாகத்தைச் சிரமப்பட்டு நீக்க வேண்டும்; அதன் பின் தேவையற்ற சடைகளை எல்லாம் நீக்கிப் பலாச் சுளையை எடுக்கவேண்டும்; அதிலும் கொட்டையையும், இன்னும் ஒரு வேண்டாத பகுதியையும் நீக்கிவிட்டுத்தான் சுளையைச் சாப்பிட முடியும்.

''நாடகத்தைக் கூத்து என்று கூறினர். இறைவனே கூத்தன் என்று வழங்கப்பட்டான்; இறைவன் நாடகத் தமிழுக்குச் சொந்தக்காரன். அவன் ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன். தெய்வத் தன்மை முத்தமிழுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

''3,000 ஆண்டுகளுக்கு முன்பேயே தமிழை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஏடுகளை எழுதி நம்மிடம் ஒப்படைத்துச் சென்ற நமது முன்னோர்களைப் பாராட்ட வேண்டும்; எங்களைப் பாராட்ட வேண்டும்.

''தமிழ்நாடு, இசையில் சிறந்த நாடு; இங்கே உள்ள இசையை கர்நாடக இசை என்று சொல்கிறார்களே அது தவறு; கரை நாட்டு இசை என்று தான் அதற்குப் பெயர். மூன்று புறமும் கடற்கரைகள் நிறைந்தது தமிழ் நாடு; எனவே தமிழ்நாடு கரை நாடு; என்று வழங்கப்பட்டது; அதனால்தான் தமிழ்நாட்டு இசை கரை நாட்டு இசை என்று வழங்கப்பட்டது. நாளடைவில் அது கர்நாடக இசை என்று ஆகிவிட்டது.

''நீதிமன்றங்களில் இன்று தமிழ் ஒலிப்பதை எண்ணி மகிழ்கிறேன். தமிழக வங்கிகளிலும், பணவிடைத் தாள்களிலும் தமிழ் இடம் பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்திலிருந்தே நான் இதைச் சொல்லி வருகிறேன். மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலாவது நிறைவேறும் என்று நம்புகிறேன்.

''அகில இந்திய வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் போது ஆகாஷ்வாணி என்று சொல்லி வருகிறார்கள். வானொலி என்று அறிவிக்கப்பட வேண்டும். இதற்கும் நமது முதல்வர் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

முத்தமிழ்க் காவலரின் நன்றியுரைக்குப் பின்னர் மாண்புமிகு செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள், விருது பெற்ற கலைஞர்களைப் பாராட்டிப் பேசினர்.

பாராட்டுரையில் அவர் குறிப்பிட்டதாவது :

''கலைஞர்களில் பலர் இன்றைக்கு வாழ்க்கையில் புகழோடு

விளங்குகிறார்கள். ஆனால் ஒரு சிலர்தான் வளத்தோடு இருக்கிறார்கள். வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய சிறப்புக் கிடைக்க முடியாதவர்களாகக்கலைஞர்களில் பலர் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

"கலைஞர்கள் மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்து வருகிறார்கள். கடுமையான உடலுழைப்பை வழங்கி வரும் உழைப்பாளர்களுக்குக் கலையின் மூலம் இன்பம் வழங்குகிறார்கள். தங்களது துன்ப, துயரங்களை மறந்து பிறருக்கு மகிழ்ச்சி அளிக்கிறார்கள். ஆனால் அவர்களது நிலை என்ன? வறுமைதான் மிஞ்சியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"நமது முதல்வர் அவர்கள் பிறருக்கு வழங்கி வழங்கிச் சிவந்த கரங்களைப் பெற்றவர்கள். இன்று அவர் மக்களிடமிருந்து வாங்குகின்ற கரத்துக்குச் சொந்தக்காரராக மாறியிருக்கின்றார்கள். அவர்கள், இன்று கலைஞர்களுக்குப் பொற்கிழிகளை வழங்குகின்றார்கள் என்றால், கலைஞர்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்றார்கள் என்று பொருள்.

"நமது தமிழ்நாட்டில் உள்ள கலைஞர்கள் காப்பாற்றப்பட்டால்தான் தமிழ் மொழி வாழும். தமிழ் மொழி வாழ்ந்தால்தான் தமிழ் இலக்கியங்கள் வாழும். இலக்கியங்கள் வாழ்ந்தால்தான் தமிழகம் வாழும்.

"ஓர் உண்மையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நமது தமிழ்த் திரைப்படங்கள் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பெருந்தொண்டாற்றி வருகின்றன. சான்றாக — மொரீஷியஸ் தீவில் உள்ள மக்கள் நமது தமிழ்க் கலையை ரசிக்கிறார்கள். அங்கெல்லாம் நமது திரைப்படங்கள் செல்கின்றன. அவை அங்கே சென்றிருக்காவிட்டால் அவர்கள் தமிழையே மறந்திருப்பார்கள்.

"மொரீஷியஸ் தீவில் உள்ள 8 இலட்சம் மக்களில் 1.25 இலட்சம் பேர் தமிழர்கள். அவர்கள் எல்லாம் தமிழ் மொழியைப் பேசத் தெரிந்து கொள்ளாமல் தமிழர்கள் என்ற பெயரை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழை எப்படி உச்சரிப்பது என்று கூடத் தெரியாமல் தவிக்கிறார்கள்.—அவர்களது ரத்தத்தில் தமிழ் ஓடுகிறது; உணர்வில் தமிழ் உலவுகிறது; ஆனால் தமிழ் மொழியைப் பேசத் தெரியாமல் ஊமைகளாக இருக்கிறார்கள். காரணம் தமிழ்த் திரைப்படங்கள் அங்கெல்லாம் இறக்குமதி செய்யப்படுவது தடுக்கப்படுகிறது. இலங்கை, மலேசியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் இதே நிலைதான். எனவே அங்கெல்லாம் உள்ள தமிழர்கள், தங்கள் தாய் மொழியை மறவாதிருப்பதற்காகத் தமிழ்ப் படங்களை அந்நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, தமிழை, தமிழ்ச் சமுதாயத்தைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது—இதனை இந்த அரசு நிறைவேற்றும்."

செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சரின் பாராட்டுரைக்குப் பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் உரையாற்றினார். அவரது உரையில் அவர் குறிப்பிட்டார்:

"கலைஞர்கள் வாழ்வாங்கு வாழக் கூடிய சூழ்நிலை தமிழகத்தில் மட்டுமல்ல வேறு எந்த மாநிலத்திலானாலும், மக்களால் கவனத்தோடு அக்கறையோடு செயல்படுத்தப் படுகிறதோ அங்குதான் கலை வளரும் என்பதை நன்கு உணர்ந்து இருக்கிறோம்.

"இங்கு விருது பெற்றவர்களில் பலர் வயது முதிர்ந்தவர்கள். இளம் வயதில் அவர்கள் எவ்வளவு புகழுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்பதையும், அதில் சிலர் பெயர் கூட மறைந்து இருக்குமோ என்ற அளவுக்கு ஒதுக்கப்பட்டு அல்லது அவர்களாகவே ஒதுங்கி இருக்கும் நிலையைக் கவனிக்கிறோம்.

"இங்கு விருது பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், எல்லா வகையிலும் அதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

"விருது பெற்றவர்களின் முகங்கள் மலர்ந்ததையும் அதில் ஏற்பட்ட மாறுதல்களையும் பார்த்தோம். எந்த அளவுக்கு எங்கள் உள்ளத்தில் தேங்கி இருந்த வேதனைகளைத் தீர்க்கவும், எங்கள் வாழ்க்கைத் தரம் உயரவும் என்ன தரப்போகிறீர்கள்? என்ற கேள்வியும் அவர்கள் முகத்தில் இருந்தது. அப்படிப் பட்டவர்களுக்கு, தமிழக அரசு தன்னால் இயன்ற அளவு உதவி செய்யும்.

"நடிப்புத் தொழிலுக்கு வந்து விட்டால், வேறு தொழில் செய்ய முடியாது என்ற சூழ்நிலையில்தான் தங்கள் தொழிலைத் தொடங்குகிறார்கள். 7வது வயதில் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினால் எந்தக் கல்லூரியில் போய்ப் படிக்க முடியும்?

"அப்படிப் பட்டவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது, அவசியம் என்பதை அரசு உணருகிறது. 7 அல்லது 8 வயதில் இருந்து குழந்தைகளில் சிலர் நாடக, சினிமா நடிப்புத் தொழிலைச் செய்யும்போது, அவர்களுக்குக் கல்வியும் கற்றுத் தர வேண்டும். வேறு ஏதாவது தொழிலும் கற்றுத் தர வேண்டும். அந்த வகையில் பாதுகாப்புத் தரத் தமிழக அரசு நிச்சயம் முயலும்.

"வானொலியில் ஆகாஷ்வாணி என்று கூறுவதற்குப் பதில் தமிழில் வானொலி என்று கூறவேண்டும் என்பதைப் பற்றி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் கூறினார்கள். முதல்வர் எம்.ஜி.ஆர். காலத்தில் அது நடைபெற வேண்டும் என்றார்கள். அவரைப் போன்றவர்களின் ஒத்துழைப்பு இருந்தால் அது நிறைவேறும் வகையில் இந்த அரசு உழைக்கும்—பாடுபடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

"தமிழே பாடமொழி என்று கொண்டுவந்து, தமிழில் அனைத்துப் பிரிவுகளும் சொல்லிக் கொடுக்கும் தகுதி பெற்ற தமிழ்ப் பெரியவர்களைக் கொண்டு, தமிழ் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்றார்.

"அவருடைய ஆசை பேராசை அல்ல. அது உரிமையின் குரல். தமிழுக்காக வாழ்பவர் இதைத் தவிர வேறு எதையும் கூறமுடியாது. ஆனால் இதை நிறைவேற்றுவதில் எத்தனை சட்டப் பிரச்சினைகள், வேறு பல எதிர்ப்புகள் இருக்கின்றன என்பதும் அவருக்குத் தெரியும்.




முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம்

25-1-'78 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில் இயற்றமிழுக்காகக் கலைமாமணி விருது பெற்ற ஒரே இயற்றமிழ்க் கலைஞர், முத்தமிழ்க் காவலர், திரு கி.ஆ.பெ. விசுவநாதம் ஆவார்கள்.

திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 11.11.1899-ல் திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர். தந்தையார் திரு கி. ஆ. பெரியண்ண பிள்ளை, தாயார் திருமதி சுப்பம்மாள்.

தமிழகத்தின் சிறந்த ஏடுகளில் 60 ஆண்டுகளாகப் பல்வகைக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளவர். குடியரசு, ஆனந்த போதினி, சண்டமாருதம், விடுதலை ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும், தமிழர் நாடு இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். 16 இயற்றமிழ் நூல்களின் ஆசிரியர். டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்திய 'தமிழ்ச்செல்வம்' என்ற நாடகத்தின் ஆசிரியர். திருச்சி நகரக் கலைக் கழகத்தின் (City Amateurs) தலைவராக 25 ஆண்டுகளாகக் கலைப்பணி புரிந்து வருபவர்.

தமிழகத்தின் சிறந்த சொற்பொழிவாளர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர். அரசியல், கலை, இலக்கிய மாநாடுகள் பலவற்றை நடத்தியவர். எண்ணற்ற தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்து வருபவர்.

மறைமலையடிகள், தந்தை பெரியார், கா. சு. பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், அறிஞர் அண்ணா முதலிய மேதைகள் பலரது அன்புக்கும் நட்புக்கும் உரியவர்.

''இந்தியாவுக்கு வரும் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கு வரும் வெளிநாட்டுக் கலைஞர்கள் நடத்தும் கலை நிகழ்ச்சி போன்ற அனைத்துத் தொடர்புகளும் இந்த மன்றத்துக்கு இருக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் மன்றத்தின் செயலாளர் அவர்கள் வைத்தார்கள்.



''இது தவறானது அல்ல. வெளிநாட்டுக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை இங்குள்ள வசதி படைத்தவர்கள்தான் கண்டு களிக்க முடிகிறது. சாதாரண மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைப்பது இல்லை.

''தமிழக அரசு மாண்பு மிகு செய்தித் துறை அமைச்சர் வீரப்பன் அவர்களின் மூலம் நிச்சயம் இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு அனுப்பும்; இது பற்றி விவாதிக்கும் சூழ்நிலையை அவர் உருவாக்குவார். முதல்வர் என்ற முறையில் அவருக்குத் துணையாக நான் இருப்பேன்.

''அமெச்சூர் நாடகக் கம்பெனிகள் பற்றியும் இங்குக் கூறினார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களில், நகரங்களில் தமிழக அரசு நாடகக் கொட்டகைகள் கட்டி, நடிப்பை மட்டும் தொழிலாகக் கொண்டவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து, எவ்வளவு குறைந்த கட்டணத்தில் கொட்டகை கொடுக்க முடியுமோ அவ்வளவுக்குக் கொடுக்கப்படும். அந்த வகையில் நாடகக் கலையை வளர்க்க தமிழக அரசு முயன்று கொண்டிருக்கிறது.

''கலைஞர்களுக்குப் பல்வேறு விபத்துக்கள் சுற்றிலும் உள்ளன. முதலில் மது, இரண்டாவது புகழினால் ஏற்படும் அகம்பாவம். இவை இரண்டும் போதும் ஒரு கலைஞனின் வாழ்வைப் பாழாக்க; அப்படிப்பட்ட கலைஞர்களை இங்கே விருது பெற்றவர்கள் திருத்த முன் வர வேண்டும்.

''கலைஞர்கள் தங்கள் உடலைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்; தங்களைக் குறை கூறுகிறவர்கள் எந்த நோக்கத்துக்காகக் கூறுகிறார்கள் என்று சிந்தித்து முடிவுக்கு வர வேண்டும்.

''தவறுகள் யாருக்கும் வரும்; தவறுகளைத் தெரிந்தும் திருத்திக் கொள்ளாதவன் அறிவுள்ளவனாக—பண்பு உள்ளவனாக இருக்க முடியாது.

''நாங்கள் தவறு செய்தால் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ்ப் பெரியார் ம.பொ.சி., நீதிபதி கோகுலகிருஷ்ணன் போன்றவர்கள், தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்வோம். இவர்கள் மட்டுமல்ல, வெளியில் இருப்பவர்கள் யாரானாலும் எங்கள் தவறுகளைச் சொன்னால் திருத்திக் கொள்கிறோம்.''

இறுதியில் செயலாளர் டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றியுரை கூற, கலைமாமணி விருது வழங்கும் திருவிழா நாட்டுப் பண்ணுடன் இனிதாக நிறைவேறியது. அந்த இனிய விழா அனைவரின் நெஞ்சங்களிலும் நிறைந்து நினைவில் கலந்து விட்டது என்று சொன்னால் 'அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'.

—நிகழ்ச்சித் தொகுப்பு:

—எஸ். சண்முகசுந்தரம், பி.லிட்.

# ரூ 100 கோடிக்கு ....



1977, ஏப்ரல் முதல் டிசம்பர் வரை இந்தியாவில் இரண்டு ரயில் என்ஜின் தொழிற்சாலைகளும், சென்னை பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், மொத்தம் ரூபாய் 100 கோடிக்கு உற்பத்தி செய்திருக்கின்றன.

1976, ஏப்ரல் முதல் டிசம்பர் வரை, இந்தியாவில் உற்பத்தியான ரயில் என்ஜின்கள், பெட்டிகளின் எண்ணிக்கை மொத்தம் ரூபாய் 22 கோடி. 1977ல் இதனுடைய உற்பத்தி ரூபாய் 77.90 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் வாரணாசி ரயில் தொழிற்சாலை 95 டீசல் என்ஜின்களையும், உதிரி பாகங்களை, முதல் 9 மாதத்திற்குள் உற்பத்தி செய்திருக்கிறது. இதனுடைய மதிப்பு ரூபாய் 38.33 கோடியாகும்.

1976ஆம் ஆண்டு இதே மாதங்களில் 85 டீசல் என்ஜின்களையும், உதிரி பாகங்களையும் ரூபாய் 28.4 கோடிக்கு உற்பத்தி செய்துள்ளது.

சித்தரஞ்சன் ரயில் என்ஜின் தொழிற்சாலை, 1977ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் மாதத்திற்குள், 65 மின்சார, டீசல் என்ஜின்களை ரூபாய் 32.84 கோடி செலவில் உற்பத்தி செய்துள்ளது. இதே மாதங்களில் 1976ல் இவற்றின் உற்பத்தி, 59 மின்சார, டீசல் என்ஜின்களை உற்பத்தி செய்துள்ளது. இவற்றின் மதிப்பு ரூ. 26.18 கோடியாகும்.

பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலையின் உற்பத்தியும் சென்ற ஆண்டைவிட நடப்பு நிதியாண்டில் உற்பத்தியைப் பெருக்கியுள்ளது. 1976ல் ரூபாய் 23.68 கோடியாக இருந்த உற்பத்தியின் அளவு, 1977ல் ரூபாய் 28.86 கோடியாக உயர்ந்துள்ளது.

# கலைமாமணி விருது பெற்ற கண்மணிகள்

# 1977-1978

| | | |
|---|---|---|
| திரு கி.ஆ.பெ. விசுவநாதம் | ... | இயற்றமிழ்க் கலைஞர் |
| மதுரை திரு சி.எஸ். சங்கர சிவம் | ... | இசைக் கலைஞர் |
| கண்டதேவி திரு எஸ். அழகிரிசாமி | ... | வயலின் கலைஞர் |
| பாலக்காடு திரு கே. குஞ்சு மணி | ... | மிருதங்கக் கலைஞர் |
| திரு ஆர்.கே. சூர்யநாராயண் | ... | வீணைக் கலைஞர் |
| திரு டி.கே. ராதாகிருஷ்ணன் | ... | புல்லாங்குழல் கலைஞர் |
| திரு எம்.பி.என். சேது ராமன் | ... | நாதசுரக் கலைஞர் |
| திரு எம்.பி.என்.பொன்னு சாமி | ... | நாதசுரக் கலைஞர் |
| இலுப்பூர் திரு ஆர்.சி. நல்லகுமார் | ... | தவில் கலைஞர் |
| திருமதி டி.ஆர். கமலா மூர்த்தி | ... | ஹரிகதா காலட்சேபக் கலைஞர் |
| திருமதி குருவாயூர் பொன்னம்மாள் | ... | அருட்பா இசைக் கலைஞர் |
| திருமதி எம்.கே. சரோஜா | ... | பரத நாட்டியக் கலைஞர் |
| திருமதி டி.கே. ராஜலட்சுமி | ... | பரத நாட்டிய ஆசிரியை |
| திரு எஸ்.எஸ். சிவசூரியன் | ... | நாடக நடிகர் |
| திருமதி நாஞ்சில் நளினி | ... | நாடக நடிகை |
| திரு சி.வி.வி. பந்துலு | ... | பழம்பெரும் நாடக நடிகர் |
| திருமதி கே. அரங்கநாயகி | ... | பழம்பெரும் நாடக நடிகை |
| திரு சி.எம்.வி. ரமணன் | ... | நாடக ஆசிரியர் |
| திரு டி.வி. வேதமூர்த்தி | ... | நாடகத் தயாரிப்பாளர் |
| திரு எம்.கே. ஆத்மநாதன் | ... | நாடகப் பாடலாசியர் |
| திரு ஆர்.எஸ். கோபால் | ... | தொழில் துறையல்லாத நாடக நடிகர் |
| திரு பி.சி. வேணுகோபால் | ... | இசை நாடக நடிகர் |
| திருமதி பி.எஸ். சிவபாக்கியம் | ... | இசை நாடக நடிகை |
| திரு இரெ. கரிகாலன் | ... | இசை நாடகப் பாடலாசிரியர் |
| திரு தேங்காய் சீனிவாசன் | ... | திரைப்பட நடிகர் |
| திருமதி ஸ்ரீ வித்யா | ... | திரைப்பட நடிகை |
| திரு பாலமுருகன் | ... | திரைப்பட வசன ஆசிரியர் |
| திரு கே. சங்கர் | ... | திரைப்பட இயக்குநர் |
| திரு வி. குமார் | ... | திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு ஏ.எம். ராஜா | ... | திரைப்படப் பின்னணிப் பாடகர் |
| திரு புலமைப்பித்தன் | ... | திரைப்படப் பாடலாசிரியர் |
| திரு கே. பாலாஜி | ... | திரைப்படத் தயாரிப்பாளர் |
| புரிசை திரு எல்லப்பத் தம்பிரான் | ... | தெருக்கூத்துக் கலைஞர் |
| திரு டி.எம். கணேசன் | ... | புரவி நாட்டியக் கலைஞர் |

**சிறப்புப் பரிசு பெற்ற கலைஞர் :**

கலைமாமணி திரு ஆர்.எஸ். மனோகர் ('சுக்ராச்சாரியார்' நாடகத் தயாரிப்புக்காக, முன்னாள் தமிழக ஆளுநர் மேதகு திரு கே. கே. ஷா அவர்களின் சுழற் கேடயம்.)

**பொற்கிழி பெற்ற கலைஞர்கள் :**

திரு சரவணபவானந்தர்—பாடலாசிரியர்
திரு பாலுப் பிள்ளை—வயலின் கலைஞர்
திரு குன்னக்குடி வெங்கட்ராமய்யர்—இசைக் கலைஞர்
திரு பழனிவேல் பிள்ளை—தவில் கலைஞர்
திரு புரிசை நடேசத் தம்பிரான்—தெருக்கூத்துக் கலைஞர்
திரு சி.எஸ். கே. சுந்தராம்பாள் (இசை நாடக நடிகை)
கவி திரு க. அ. ஆறுமுகனார்—நாடகப் பாடலாசிரியர்
திரு பி. ஏ. குமார் —திரைப்படத் தயாரிப்பாளர்.



விழாவில் திறந்து வைக்கப் பெற்ற காலஞ்சென்ற கலைமேதைகளின் திருவுருவப்படங்கள்

திரு கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை —மாபெரும் தமிழ்க் கவிஞர்
திரு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் — தமிழ்ப் பாவேந்தர்
திரு நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை —தேசியக் கவிஞர்
திரு நீ. கந்தசாமிப் பிள்ளை — இயற் பேராசிரியர்—தமிழாராய்ச்சியாளர்
திரு பக்கிரியா பிள்ளை—கொன்னக்கோல் வித்வான்
திரு மகாராஜபுரம் விசுவநாதய்யர்—இசை மேதை
திருமதி மயிலாப்பூர் கௌரியம்மாள்—பரத நாட்டிய மேதை

திரு பஞ்சாபகேச பிள்ளை—தவில் மேதை
திரு எம்.எஸ். முத்துக்கிருஷ்ணன்—பழம்பெரும் நடிகர், நாடகத் தயாரிப்பாளர்
திரு எம். எம். சிதம்பரநாதன் —பழம் பெரும் நாடக நடிகர்.
திரு ஏ.பி. நாகராஜன்—நடிகர், திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர்
திரு எம்.எம். தண்டபாணி தேசிகர் —இசை மேதை
திரு காருகுறிச்சி அருணாசலம் — நாதஸ்வர விற்பன்னர்
திரு ஈ. கிருஷ்ணய்யர்—தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற முன்னாள் செயலாளர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

— அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

ஜெய்—

வெளியீடு :— இயக்குநர். செய்தி. மக்கள் தொடர்புத்துறை. தமிழ்நாடு அரசு.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.